பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 31 | செவ்வாய்க்கிழமை | 16.09.2025 | அதிர்வு 046

### இராணுவத்தினர் வசமிருந்த
## முப்பது ஏக்கர் காணிகள் கிளிநொச்சியில் விடுவிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் படையினர் வசமிருந்த முப்பது ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

06 ▶

# உள்ளக விசாரணை மூலமே நீதி வழங்க அரசு நடவடிக்கை

## தமிழ்க் கட்சிகளின் கூக்குரலுக்கு அடிபணியோம் என்கிறார் அமைச்சர்



**“இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள்ளக விசாரணை மூலம் நீதி வழங்க தேசிய மக்கள் சக்தி அரசு நடவடிக்கை எடுக்கும்” - என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**

06 ▶

# மாகாண சபைத் தேர்தல் தாமதமாக விகிதாசார முறைமைதான் காரணம்

## யாழில் தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

“விருப்பு முறைமை வாக்களிப்பாக இருந்த மாகாண சபை முறைமையை விகிதாசார முறைமையாக்கத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டமையே தேர்தல் காலம் தாழ்த்திச் செல்லக் காரணமாகும்.”

– இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவர்

06 ▶



உயர் நீதிமன்றத்தில் உள்ள நீதியரசர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பியுங்கள் என்று நாட்டின் சிரேஷ்ட சட்டத்தரணிகள் பலருக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளை அவர்கள் எல்லோரும் நிராகரித்து விட்டனர் என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

இப்போது உயர்நீதிமன்றத்தில் இரண்டு நீதியரசர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் ரத்னப்பிரிய குருசிங்கவை ஜனாதிபதி அநுர குமாரதிஸநாயக்க பரிந்துரைத்திருக்கின்றார்.

இம்முறை இந்த வெற்றிடங்களுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றுவோர் தொடர்பில் எந்த பரிந்துரையும் சட்டமா அதிபரிடமிருந்து வரவில்லை. சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருக்கும் மூத்த சட்டத்தரணிகள் கூட இந்த உயர்நீதிமன்ற நீதியரசர் நியமனத்தில் ஈடுபாடு காட்டவில்லை என்று தெரிகிறது.

நீதியரசர் பதவியில் கிட்டும் மாதாந்த வேதனத்தை விட வெளியில் சிரேஷ்ட

06 ▶

# மாணவர்கள் சேர்ப்பு சுற்றறிக்கை தாமதம் கல்வியமைச்சர் ஹரிணி விளக்கமளித்தார்

மாணவர் மீதான அழுத்தத்தைக் குறைக்கும் நோக்கில், புதிய கொள்கையை உருவாக்கும் போது பல சிக்கல்களைத் தீர்க்க அமைச்சகம் செயல்பட்டு வருவதால், இடைநிலை தரங்களுக்கான மாணவவர் சேர்ப்பு தொடர்பான சுற்றறிக்கை தாமதமாக வெளியிடப்பட்டதாக பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியா தெரிவித்தார்.

தேசிய பாடசாலைகளில் 3 வருடங்களை பூர்த்திசெய்த கல்விசார், கல்விசாரா ஊழியர்களுக்கு, தங்களது பிள்ளைகளை தாங்கள் பணியாற்றும் பாடசாலைகளில் சேர்ப்பதற்கான வாய்ப்பை மீண்டும் வழங்குமாறு ஆசிரியர்கள் சிலர் நேற்று கல்வி அமைச்சு வருகைதந்தபோது, கல்வியமைச்சருடன் கலந்துரையாட அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

அதன்போதே, பிரதமர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

வரைவு சுற்றறிக்கை நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட துணைக் குழுவிடம் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும், கொள்கையை இறுதி செய்வதற்கு முன்பு தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன எனவும் பிரதமர் கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கல்வியின் தரத்தை மேம்படுத்த இந்தக் கொள்கையை நாங்கள் செயல்படுத்த வேண்டும்.

ஒரு அரசாங்கமாக, கடந்த காலத்தில் நடந்தவற்றுக்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது, ஆனால் அந்தப் பிரச்சினைகளை நாங்கள் சரிசெய்ய வேண்டும்.

வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளில் மட்டுமே மாணவர்களை சேர்ப்பதன் அடிப்படையில் இறுதி முடிவு எடுக்கப்பட்டது என்றும் வெற்றிடம் இல்லாத பாடசாலைகளில் சேர்க்கை செய்யப்படாது.

நாடாளுமன்ற விவாதங்களின் பின்னர் இந்த கொள்கை இணக்கம் காணப்பட்டது.



வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளில் பட்டியல் ஏற்கனவே கோரப்பட்டுள்ளது.

ஒரு வகுப்பறையின் அதிகபட்ச கொள்ளளவு 45 மாணவர்கள் என்றாலும், சில பாடசாலைகளில் ஒரு வகுப்பில் சுமார் 60 மாணவர்கள் உள்ளனர்.

இதனால் ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவர்களுக்கு போதுமான கவனம் செலுத்துவது கடினமானதாகும்.

பல மாணவர் சேர்க்கைகள் கல்வியின் தரத்தை விட பாடசாலைகளின் நற்பெயரால் பாதிக்கப்பட்டுள்ளது. - என்றார்.

இதனையடுத்து, கல்வியமைச்சர் பிரதமர் ஹரிணி அமரசூரியவுடனான பேச்சுவார்த்தை தோல்வியுற்றதாகக் கூறி கல்வியமைச்சரின் காரியாலயத்துக்கு முன்பாக உணவுதவிர்ப்பு போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்ததுடன், அவர்களில் சிலருக்கு ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடலை நடத்துவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டது.

# மடு மாதா தேவாலயத்துக்குச் சென்று திரும்பிய இளைஞர் மல்வத்து ஓயாவில் மூழ்கி உயிரிழப்பு!

மடு மாதா தேவாலயத்துக்குச் சென்று திரும்பிய இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மல்வத்து ஓயாவில் நீராடிக்கொண்டிருந்த போதே மேற்படி இளைஞர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று தந்திரிமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த இளைஞர் உறவினர்களுடன் இணைந்து மடு மாதா தேவாலயத்துக்குச் சென்றுள்ள நிலையில் வழிபாடுகளை முடித்துவிட்டு மீண்டும் வீடு திரும்பும் போது நீராடுவதற்காக மல்வத்து ஓயாவுக்குச் சென்றுள்ளார்.

மேற்படி இளைஞரும் உறவினர்களும் இணைந்து மல்வத்து ஓயாவில் நீராடிக்கொண்டிருந்த போது இளைஞர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் ஜா - எல பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் ஆவார்.

இது தொடர்பில் தந்திரிமலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கீரி சம்பா தட்டுப்பாடு செயற்கையானது; விவசாய அமைப்புகள் குற்றச்சாட்டு

கீரி சம்பா அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றமை, செயற்கையான முறையில் சித்திரிக்கப்பட்டுள்ள விடயம் என விவசாய அமைப்புகள் குற்றம் சுமத்தியுள்ளன.

சந்தையில் தற்போது கீரி சம்பா அரிசிக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த பற்றாக்குறையானது நெல் ஆலை உரிமையாளர்களால் செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கீரி சம்பா அரிசியை விற்பனை செய்வதற்கான அதிகபட்ச சில்லறை விலை 260 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனினும், நிர்ணயிக்கப்பட்டுள்ள சில்லறை விலையை விட தற்போது 320 முதல் 325 ரூபா வரையில் கீரி சம்பா விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில், சந்தையில் நிலவும் கீரி சம்பா அரிசிக்கு



மாற்றீடாக வேறு வகை அரிசியை இறக்குமதி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.





# மக்களின் பிரச்சினைகளை தீர்க்காத அரசு எதிர்க்கட்சிகளின் குரல்களை நசுக்குகிறது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு மாறாக எதிர்க்கட்சியின் குரலை அடக்கும் செயற்பாட்டினை அரசாங்கம் முன்னெடுக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் மாவட்டம், மதவாச்சி மற்றும் கெபித்திகொல்லாவ பிரதேச விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய நேற்று அந்தப் பகுதிகளும் விஜயம் செய்தபோதே, அவர் இதனை குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போது, நாடாளுமன்றத்தில் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

மக்களின் பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்படும்போது, ஒலிவாங்கியைத் துண்டிக்கும் நிலைக்கு அரசாங்கம் வந்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவராக, நானும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சக உறுப்பினர்களும் தனிப்பட்ட விடயங்களை வெளிப்படுத்துவதை விடுத்து, மக்கள் பிரச்சினைகளை முன்வைப்பதற்காகவே எழுந்து நிற்கிறோம்.

இவ்வாறு மக்கள் பிரச்சினைகளை முன்வைக்கும் சந்தர்ப்பங்களில் அதைத் தடுப்பது, கருத்துகளை வெளியிடுவதற்கு தடங்கல் ஏற்படுத்துவது இழிவான செயலாகும்.

ஒலிவாங்கிகளை துண்டிப்பதையோ அல்லது விவாதத்தை சீர்குலைப்பதையோ விடுத்து எதிர்க்கட்சியால் முன்வைக்கப்படும் மக்கள் பிரச்சினைகளைக் கேட்டறிந்து நடைமுறை ரீதியான பதில்களை பெற்றுக் கொடுக்கும் பணியையே அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

தீர்வுகளை வழங்கும் யுகத்துக்கு மாறாக எதிர்க்கட்சியின் குரலை அடக்கும், பொய்யான கதைகளை முன்வைக்கும் யுகமே தற்சமயம் காணப்படுகின்றது.

இவ்வாறு பிரச்சினைகளை நாம் முன்வைப்பது அரசியல் நாடகமல்ல, மாறாக மக்களின் பிரச்சினைகளை அரசாங்கத்துக்கு முன்வைப்பதும், மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கத் தேவையான வழிகாட்டுதலை வழங்குவதுமாகும்.

அரசாங்கத்தின் பல்வேறு நாடகங்களுக்குள் மக்கள் சிக்கிக் கொண்டாலும், எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி நாடகங்களை நடத்தாது மக்களினது பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வுகளை வழங்கி வருகிறது.” – என்றார்














# பருத்தித்துறை துறைமுகம் எமக்கு வேண்டாம்; சுப்பர்மடம் மீனவர் சங்கம் மகஜர் கையளிப்பு

சுப்பர்மடம் மக்கள் சார்பில் மீனவர் சங்க பிரதிநிதிகள், பருத்தித்துறை நகர பிதா வின்சன் டீ போல் டக்ளஸ் போல் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ந.திரிலிங்கநாதன் ஆகியோரை நேரில் சந்தித்து பருத்தித்துறை துறைமுகம் அமையும் பட்சத்தில் ஏற்படும் பிரசினைகளை எடுத்துக் கூறி மகஜர்களையும் கையளித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பருத்தித்துறை – சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க செயலாளர் சிறீவரதன் சுலக்ஸன் மற்றும் பொருளாளர் சிவ பாதசுந்தரம் சதீஸ் ஆகியோர் நேற்று திங்கள் கிழமை யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் ஊடக சந்திப்பு ஒன்றையும் நடத்தியிருந்தனர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

“பருத்தித்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்வதால் எமது கிராமமே அழிவடைந்து போகும் அபாயம் உள்ளது. துறைமுகம் அமைக்கப்படும் போது அதற்கு மேற்கு பக்கமாக ஏற்படும் கடலரிப்பிற்கு முகம்கொடுத்து அழிவை சந்திக்கும் முதல் கிராமமாக எமது சுப்பர்மடம் மீனவ கிராமமே காணப்படுகிறது.

1000 கோடி ரூபா செலவில் இந்திய அரசாங்கம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவதற்காக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

2018 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய முற்பட்ட போது எமது சங்கம் உள்ளிட்ட பல சமூக மட்ட அமைப்புக்களின் குறிப்பாக பருத்தித்துறை துறைமுக சூழலில் காணப்படும் பிரபல பாடசாலைகளின் எதிர்ப்புக் காரணமாக கைவிடப்பட்டது. மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் திட்டத்தை தாம் ஒருபோதும் நடைமுறப்படுத்த மாட்டோம் என ஆசிய அபிவிருத்தி வங்கி சார்பில் கலந்துரையாடிய அதிகாரிகள் உறுதிபடத் தெரிவித்திருந்தனர்.

அவ்வாறு மக்கள், சமூக மட்ட அமைப்புகள், பாடசாலை சமூகம் என்பவற்றின் எதிர்ப்பினால் கைவிடப்பட்ட துறைமுக திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த இந்திய அரசு முயல்கிறது.




அருகில் உள்ள மீனவ கிராமங்கள் மற்றும் சமூகமட்ட அமைப்புகளுடன் கலந்துரையாடவில்லை, எமக்கு எவருக்குமே அறிவிக்காது தன்னிச்சையாக கூட்டம் கூடி முடிவுகளை எடுத்துவிட்டு அபிவிருத்திக்காக கள ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இச்செயற்பாடு எமக்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இந்த நடவடிக்கையை நாம் எதிர்க்கிறோம், இத் துறைமுகம் எமக்கு வேண்டாம். பதிலாக வடமராட்சியில் உள்ள 14 மீன்பிடி துறைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி தருவதற்கும் கரையோரமாக உள்ள அணைகளை அமைத்துத் தாருங்கள்.

தென்னிலங்கையை சேர்ந்த 10-20 வரையான பலநாட் படகுகளே பருத்தித்துறை துறைமுகத்தில் வந்து நிற்கின்றன. அவ்வாறு வருகைதரும் 10-20 வரையான படுகுகளுக்குதான் ஆயிரம் கோடி செலவில் துறைமுகம் அமைக்க போகின்றார்கள்? இந்த துறைமுகத்தை சர்வதேச தரத்தில் அபிவிருத்தி செய்வதன் மூலம் உள்ளூர் மீனவர்கள் எவருக்கும் அதனால் நன்மை கிடைக்கப்போவதில்லை. வடமராட்சி பகுதிதில் ஒரு சில பல நாட் படகுகளே காணப்படுகின்றன. அந்தந்த மீன்பிடித்துறைகளை ஆழமாக்கி அணைகளை அமைத்து கொடுத்தால் அவற்றை அங்கேயே நிறுத்த முடியும்.

அதுமாத்திரமல்ல உள்ளூர் மீனவர்களுக்காக என அபிவிருத்தி செய்யப்பட்ட மயிலிட்டி மீன்பிடித்துறைமுகமானது இன்று அந்த ஊர் மீனவர்களே எதிர்க்கும் அளவுக்கு நிலைமை கைமீறி சென்றுள்ளது. வெளி மாவட்ட படகுகளுக்கான துறைமுகமாக மாற்றப்பட்டுள்ளது. உள்ளூர் மீனவர்களுக்கு எந்த வசதியும் செய்யப்படவில்லை. அபிவிருத்தியின் பெயரால் அந்த பிரதேச மக்களிடம் இருந்து மயிலிட்டி துறைமுகம் பறித்தெடுக்கப்பட்டதை போன்றுதான் இங்கும் நடக்கும்.

துறைமுகம் அமைப்பதில் அக்கறை காட்டும் இந்திய அரசாங்கம் உண்மையில் வட பகுதி மீனவர்களது முன்னேற்றத்தில் அக்கறை இருக்குமாக இருந்தால் எல்லை தாண்டி வந்து எமது வளங்களை சூறையாடியும் எமது வாழ்வாதாரத்தையும் அழித்துவரும் இந்திய இழுவைமடி விசைப்படுகுகளை எல்லையில் வைத்து தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அநுர அரசே தேர்தல்களின் போது மீடவர்களின் பக்கமே நாம் இருப்போம், வடக்கு மீனவர்களைப் பாதுகாப்போம் என்று கூறினீர்களே, இப்போ என்னாச்சு?

இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிடில் வீதியில் இறங்கி போராடும் நிலை ஏற்படும்.” – என்றனர்.

# நவராத்திரி விழாக்கள் பாடசாலைகளில் நடைபெறுவதை உறுதிப்படுத்துங்கள்!

## அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை



நவராத்திரி விழாக்கள் பாடசாலைகளில் நடைபெறுவதை உறுதிப்படுத்துமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது ,

இந்த விடயம் தொடர்பில அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவிக்கையில் –

அடுத வாரம் முதல் தொடங்கவுள்ள நவராத்திரி காலத்தில் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் முழுமையாக அத்தினங்களை பக்திபூர்வமாகக் கொண்டாடுவதற்கு பாடசாலை அதிபர்கள், கல்வித் திணைக்கள பணிப்பாளர்கள், கல்வி அமைசசின் செயலாளர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

வருடம்தோறும் நடைபெறும் நவராத்தி விழா கல்விக்குரிய விழா. அது மட்டுமன்றி மாணவர்களின் கலை ஆளுமையை வெளிப்படுத்தும் காலமாகும். எத்தவொரு மாணவனும் தனது ஆளுமையை வெளிப்படுத்தவேண்டிய அரிய சந்தர்பமான நாள்.

கடந்த சில ஆண்டுகளாக நவராத்திரி காலத்தில் பரீட்சைகளையும், வேறு விளையாட்டுப் போன்ற நிகழ்வுகளையும் திணைக்களங்கள் நடத்தியமையால் பல பாடசாலைகளில் கடந்த சில ஆண்டுகளாக நவராத்திரி விழாக்கள் வழமை போன்று சீராக இடம்பெறவில்லை.

நவராத்திரி விழாவானது சைவ தமிழர்களுக்கு முக்கியமான விழாக்காலாகும். குறிப்பக இளைய தலைமுறையினர் பல்வேறு நிகழ்வுகளில் பங்கு பற்றி தமது ஆளுமைகளை வெளிப்படுத்தும் காலமாகும். இக்காலத்தைப் பாடசாலைகளில் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

எனவே இந்த விடயத்தை பாடசாலை அதிபர்கள், வலயப் பணிப்பாளர்கள், கல்வி அமைச்சின் செயலர்கள் கவனத்தில் எடுத்து நவராத்திரி விழாக்கள் பாடசாலைகளில் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும். – என்றார்.




# அதிக சத்தத்துடன் வேகமாகப் பறந்த மோ. சைக்கிள்கள் மடக்கிப் பிடிப்பு!

## வவுனியா பொலிஸார் அதிரடி நடவடிக்கை

(கி.வசந்தன்)

பொது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் அதிக சத்தத்துடன் வேகமாகச் சென்ற மோட்டர் சைக்கிள்களுக்கு எதிராக வவுனியா போக்குவரத்து பொலிஸார் நேற்று நடவடிக்கை எடுத்தனர்.

வவுனியா வைரவபுளியங்குளம் பகுதி, பூங்கா வீதி என்பவற்றில் அதிக சத்தத்துடன் வேகமாக மோட்டர் சைக்கிள்கள் சிலவற்றை இளைஞர்கள் செலுத்தி வருவதுடன், அப்பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடுவோர், அப் பகுதியில் வசிப்போர், மாணவர்கள் என்போருக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தி வந்தனர். அத்துடன் விபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் வவுனியா மாநகர சபையால் பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டத்தையடுத்து பூங்கா வீதி, வைரவபுளியங்குளம் ஆகிய பகுதிகளில் கடமையில் ஈடுபட்ட போக்குவரத்துப் பொலிஸார் அந்த மோட்டர் சைக்கிள்களைச் செலுத்திய சாரதிகளுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுத்துள்ளமையுடன், மோட்டர் சைக்கிள்களையும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

# யாழில் ‘ராமாயணா’ கலாசார மாநாடு



யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகமும், இவன்ரோக் அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ‘ராமாயணா’ கலாசார மாநாடு, யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகத்தினர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்தரணியாக இருந்து பெருந்தொகை உழைக்கலாம் என்ற காரணம் கருதியே உயர்நீதிமன்ற நீதியரசர் பதவியில் சிரேஷ்ட சட்டத்தரணிகள் ஈடுபாடு காட்டவில்லை என்று கூறப்படுகின்றது.

இதற்கிடையில் –

கீழ்நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகள், நீதிவான்கள் போன்றோருக்கு எதிரான முறைப்பாடுகள் குறித்து நீதிச் சேவை ஆணைக்குழு விசாரணையைத் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், தவறான நடத்தைக் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் பல நீதிபதிகள், நீதிவான்கள் தத்தமது பதவிகளில் இருந்து நீதிச் சேவை ஆணைக்குழுவினால் தாங்கள் இடைநீக்கம் செய்யப்படுவதற்கு முன்னதாக, நீதித்துறை சேவையிலிருந்து தாங்களாகவே ராஜினாமாச் செய்து விலக முன்வந்துள்ளனர் என் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தாங்கள் பதவியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டால், பின்னர் சட்டத் தொழிலுக்குத் திரும்புவதில் உள்ள சவால்கள் குறித்த கவலைகள் அதிகரித்து வரும் நிலையிலேயே இந்த ராஜினாமாக்கள் வரவுள்ள என விடயமறிந்த அந்த வட்டாரங்கள் கூறுகின்றன்.

சமீபத்திய மாதங்களில், பல நீதிவான்கள், மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் கடந்த வாரம், ஒரு மேல் நீதிமன்ற நீதிபதியும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார்.

முன்னதாக, இதே போன்ற குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து மத்துகம நீதிவான் தாமாகவே தனது பதவியை ராஜினாமாச் செய்தார்.

நீதிவான்கள், நீதிபதிகளுக்கு எதிரான முறைப்பாடுகள் குறித்து நீதிச் சேவை ஆணைக்குழு விசாரணையைத் தீவிரப்படுத்தியுள்ள நிலையில் இந்த ராஜினாமாக்கள் என்ற விடயம் கட்டவிழ்கின்றது.

இதற்கிடையில், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலாலே மீதான விசாரணையை ஆறு மாதங்களுக்குள் முடிப்பதாக நீதிச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது. 417 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரிகையை வழங்கிய பின்னர் நீதிபதி பலாலே கடந்த வாரம் பணிநீக்கம் செய்யப்பட்டார். இந்த விசாரணையை உயர் நீதிமன்ற நீதியரசர் ஜனக் டி சில்வா நடத்தி வருகிறார்.

நீதிச் சேவை ஆணைக்குழு தன்னுடைய ஒரு தனித் தீர்ப்பில், நொச்சியாகமநீதிவானைஓர்ஒழுக்காற்றுவிசாரணையில் குற்றவாளி எனக் கண்டறிந்த பின்னர், அவரைப் பணிநீக்கம் செய்துள்ளது. இது அவருக்கு அதிகாரப்பூர்வ எச்சரிக்கை விடுக்கப்பட்ட முந்தைய விசாரணையைத் தொடர்ந்து, இது அவரது இரண்டாவது விசாரணையாகும். அதன் முடிவில் அவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்.

## உள்ளக விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“இலங்கை மீது சர்வதேச விசாரணை வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் இங்கிருந்து அல்ல ஜெனிவா சென்று கூக்குரல் இட்டாலும் அதற்கு எமது அரசு அடிபணியாது” – என்றும் அவர் குறிப்பிட்டார்.

“உள்ளக விசாரணையைத்தான் ஐ.நா. மனித உரிமைகளின் பேரவையின் ஆணையாளரும் வலியுறுத்தியுள்ளார். இலங்கையின் இறையாண்மையை மீறி சர்வதேச சமூகம் செயற்பட முடியாது.” – என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

“கடந்த அரசுகள் போல் நாமும் நீதி வழங்கும் நடவடிக்கைகளில் பின்னிற்க மாட்டோம். மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கியே தீருவோம்.” – என்றும் நீதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நீதி அமைச்சர் ஹர்சன ராஜகருணா, பிரதி அமைச்சர் முனீர் மௌலவி உட்பட அந்த அமைச்சின் அதிகாரிகள் கொண்ட விசேட குழு இந்த வாரம் ஜெனிவா செல்கின்றது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெறுகின்றது. இதில், பங்கேற்கவே இந்தக் குழு அங்கு செல்கின்றது.

வெளிவிவகாரஅமைச்சர்விஜிதஹேரத் தலைமையிலான குழு கடந்த திங்கட்கிழமை ஜெனிவா சென்று இலங்கையின் நிலைப்பாட்டை அறிவித்து, நாடு திரும்பியுள்ளது. இந்தநிலையிலேயே நீதி அமைச்சர் தலைமையில் விசேட குழு ஜெனிவா செல்லவுள்ளது.

இந்தக் குழு ஜெனிவாவில் உள்ளக நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டவும் உள்ளகப் பொறிமுறை விசாரணைகளை வலுப்படுத்தும் செயல்முறைகளை வலுப்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபடும் என்றும் கூறப்படுகின்றது.

## முப்பது ஏக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த 2009 ஆண்டு முதல் படையினர் வசமிருந்த தனியார்கள் மற்றும் அரச காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வந்துள்ளன. அதன் தொடர்சியாக கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவிலுள்ள 7 ஏக்கர் காணிகள் இம்மாதம் 7 ஆம் திகதி விடுவிக்கப்பட்டு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகள் தற்காலிகமாக மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பொறுப்பில் கையளிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று நல்லூர் கிராம அலுவலர் பிரிவிலுள்ள முட்கொம்பன் பகுதியில் இராணுவத்தினர் வசமிருந்த 20 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள இயக்கச்சிப் பகுதியில் இராணுவத்தினர் வசமிருந்த தனியாருக்குச் சொந்தமான 3 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். ஊடகவியலாளர்களுடன் நடத்திய சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்தச் சட்ட வரைமுறையால் எல்லை நிர்ணய வரையறைகள் சீர்திருத்தம் குறித்த பிரச்சினை இருக்கின்றது. இது தீர்க்கப்பட்டால் உடனடியாகத் தேர்தல் நடைபெறும். அதற்குத் திணைக்களம் தயாராக இருக்கின்றது. அல்லது குறித்த தீர்மானத்தைத் தற்போது நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையூடாக நிறைவேற்றி மீண்டும் பழைய முறைமையை நடைமுறைப்படுத்த நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றினால் பழைய முறைமையில் தேர்தலை நடத்த முடியும். அதற்கு ஏற்ற கால அவகாசமும் உள்ளது.” – என்றார்.




# மட்டக்களப்பில் மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புக்கு எதிரான தொடர் போராட்டம் 2 ஆவது ஆண்டில்!

## நேற்று விசேட கவனவீர்ப்பு நடவடிக்கையில் மக்கள் கூட்டம்

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கோரிய தொடர் போராட்டத்தின் 02 ஆவது வருட பூர்த்தியைக் கருதி நேற்றைய தினம் சித்தாண்டியில் பண்ணையாளர்களின் போராட்டம் இடம்பெறும் இடத்தில் பாரிய கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமது மேய்ச்சல் தரைக் காணியை வர்த்தமானிப்படுத்துமாறு கோரியும், சட்ட விரோத பயிர்ச் செய்கையாளர்களை அகற்றுமாறு கோரியும் சித்தாண்டி முச்சந்தி பிள்ளையார் ஆலயத்திலிருந்து பேரணி ஆரம்பமாகி போராட்டம் நடைபெறும் இடம் வரையில் நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்துபண்ணையாளர்களின் போராட்டம் இடம்பெறும் இடத்தில் கவன ஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மயிலத்தமடு, மாதவனை கால்நடை மேய்ச்சல் தரைப் பகுதியில் கால்நடைகளுக்கும் பண்ணையாளர்களுக்கும் எதிராக நடைபெறும் அநீதிக்கு எதிரான அறவழிப்போராட்டம் இரண்டு வருடங்களை கடந்துள்ள – அதாவது 730 வது நாளாக நடைபெற்றுவரும் – நிலையில் நேற்று இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மயிலத்தமடுவில் உள்ள சட்ட விரோத பயிர்ச்செய்கையாளர்களைவெளியேற்று, பண்ணையாளர்கள் தமிழர்கள் என்பதாலா தீர்வு வழங்குவதில் தாமதம்?, கால்நடை பண்ணையாளர்களின் கோரிக்கையினை நிறைவேற்று, பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு மேய்ச்சல் தரையினை வழங்கு, 730 நாள்கள் கடந்தும் தீர்வு வழங்காதது ஏன்? – என்பன போன்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தமது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டும் என்ற கோசங்களும் முன்வைக்கப்பட்டன.

பாரம்பரியமாக காலநடை வளர்ப்பாளர்களால் மேய்ச்சற்தரையாகப் பயன்படுத்தப்பட்டு வந்த மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரையில் அயல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் அத்துமீறிய விவசாய நடவடிக்கை, காடழிப்பு மற்றும் அங்கு மேய்ச்சலில் ஈடுபடும் கால்நடைகளைக் கொல்லுதல், பண்ணையாளர்களை அச்சுறுத்துதல் போன்ற செயற்பாடுகளை உடன்நிறுத்தி. அத்துமீறிய செயற்பாட்டாளர்களை வெளியேற்றி, அந்தப் பிரதேசத்தை தங்களின் கால்நடைகளுக்கான மேய்ச்சற்தரையாகப் வர்த்தமானி பிரகடணப்படுத்தக் கோரி கடந்த 2023 ஆண்டு இதே நாளில் கால்நடை பண்ணையாளர்கள் தங்கள் தொடர் கவனயீர்ப்பினை முன்னெடுத்திருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், இ.சிறிநாத், பிரதேச சபைத் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள்,மாவட்ட வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட சங்க உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், தமிழரசுக்கட்சி உள்ளிட்ட அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், கால்நடை வளர்ப்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்களின் மகஜர் ஒன்று அரசாங்கத்திற்கு வழங்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் சங்கத்தின் தலைவர் நிமலனால் வழங்கிவைக்கப்பட்டது.












# சமூகப் பொறுப்பினை உணர்ந்து செயற்படுங்கள்! வீரமுனை வளைவு சம்பந்தமான வழக்கில் உத்தரவு

**(பாறுக் ஷிஹான்)**

சர்ச்சைக்குரிய சம்மாந்துறை வீரமுனை வளைவு பிணக்கு தொடர்பில் இரு தரப்பினரும் சமூக பொறுப்புணர்வுடன் உணர்ந்து நடந்து இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும் என சம்மாந்துறை நீதிவான் ஜே.பீ ஏ.ரஞ்சித்குமார் மன்றில் அறிவுறுத்தல் வழங்கினார்.

சம்மாந்துறை வீரமுனை வரவேற்பு வளைவு தொடர்பிலான வழக்கு நேற்று திங்கட்கிழமை சம்மாந்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன் போது சம்மாந்துறை பிரதேச சபை சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் மற்றும் பிரதிவாதிகளான ஆலய நிர்வாகம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கனிஷ்டசட்டத்தரணிகளானசுதர்சன்கமல் பெனிஸ்லஸ் துஷான், அ.நிதான்சன் ஆகியோர் மன்றில் தோன்றி இருந்தனர்.

இதன்போது இரு தரப்பினரதும் வாதப்பிரதி வாதங்களை அடுத்து இரு தரப்பினரும் இந்த விடயத்தில் சமூக பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும் என நீதிவான் நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்டது.

மேலும் இது அதிகாரம் சம்மந்தபட்ட விடயம் அல்ல என்பதுடன் இது சமூகம் சார்ந்த விடயம் எனவும் குறிப்பிடப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

இது தவிர இந்த வீரமுனை வரவேற்பு வளைவு பிணக்கை இணக்கமாக சட்ட அனுமதியோடு தீர்ப்பதற்காக எதிர்வரும் வருடம் ஜனவரி 9 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இரண்டு சமூகங்களும் சமூகமாக வாழ வேண்டும் என்ற கருத்தைக் கொண்டு இரண்டு சமூகங்களும் சேர்ந்து பேசி ஓர் இணக்கப்பாட்டிற்கு வர முடியுமாக இருந்தால் அனுமதியை கொடுப்பதில் தங்களுக்கு எந்த விதமான தடையும் இல்லை என பிரதேச சபையினர் தெரிவித்தனர். ஆகையினால் அடுத்த தவணைக்கு முன்னதாக இரண்டு சமூகங்களும் சேர்ந்து இதை எப்படியாவது தீர்த்துக் கொள்வது என்பதை குறித்து ஆராய்ந்து ஓர் இணக்கப்பாட்டிற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என பிரதிவாதிகளான ஆலய நிர்வாகம் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஊடகங்களிடம் குறிப்பிட்டார்.





# சென்னை உயர்ஸ்தானிகர் நியமனத்தில் எவ்வித அரசியல் தலையீடும் இல்லை

## வெளிவிவகார அமைச்சு தகவல்

சென்னைக்கான துணை உயர்ஸ்தானிகராக கேதீஸ்வரன் கணேசநாதன், நியமிக்கப்பட்டதில் எவ்வித அரசியல் தலையீடும் இல்லை என வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளரான கேதீஸ்வரன் கணேசநாதன், சென்னைக்கான இலங்கையின் துணை உயர்ஸ்தானிகராக அண்மையில் நியமிக்கப்பட்டார்.

எனினும் இது இராஜதந்திர வட்டாரங்கள் மற்றும் வெளிவிவகார அமைச்சினுள் குறிப்பிடத்தக்க கவலையைத் தூண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்கூட்டிய இராஜதந்திர அல்லது வெளிநாட்டு சேவை அனுபவம் இல்லாத கேதீஸ்வரன், இலங்கையின் மிக




மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வெளிநாட்டுப் பதவிகளில் ஒன்றுக்காக நியமிக்கப்பட்டுள்ளார் என செய்திகள் வெளிவந்தன.

இந்த நிலையில் இந்த நியமனம் குறித்து வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

இ தூதுவர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே இருக்கின்றது எனவும் அதற்கமைய உயர்ஸ்தனிகர்கள் மற்றும் தூதுவர்களை ஜனாதிபதி நியமித்து அனுப்புவார் என்றும் தெரிவித்தார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இழுத்தடிப்புத் தந்திரம்

'தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது' என்ற பேச்சு வழக்கு நம் மத்தியில் உள்ளது. நேரடியாக ஒரு செயலைச் செய்யாமல் சுற்றி வளைத்து, காலத்தை இழுத்தடித்து, நேரத்தையும் முயற்சியையும் வீண் விரயமாக்கி, அந்தச் செயலைச் செய்வதை இவ்வாறு கூறுவர்.

நாட்டில் நீண்ட காலமாக நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படும் மாகாண சபைத் தேர்தல் விடயத்தை அரசாங்கம் இப்படி 'தலையைச் சுற்றி மூக்கைத் தொடும்' வழியில் கையாள முயல்வதாகத் தெரிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த வெற்றி, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் பின்னடைவைக் கண்டமையினால், தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து வருகின்றது இந்த அரசு.

ஆயினும், அந்தத் தேர்தலை மேலும் தாமதப்படுத்தாமல் உடனடியாக நடத்துவதற்கு இலங்கை மீது சர்வதேச அழுத்தம் அதிகரித்து வருகின்றது. அதனால் இப்போது 'தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது' போன்ற பாணியில் அந்த விடயத்தை கையாள முயலுகின்றது அரசு தரப்பு.

மாகாண சபை தேர்தல்களை நடத்துவதற்கு, முன்னர் நடைமுறையில் இருந்த சட்டங்களை அப்படியே மீண்டும் கொண்டு வருவதை உறுதிப்படுத்தும் விதத்தில் புதிய ஒரு வரி சட்ட மூலத்தை நிறைவேற்றினால் பழைய தேர்தல் சட்டங்கள் நடைமுறைக்கு வந்து விடும். அவற்றின் கீழ் மாகாண சபை தேர்தல்களை நடத்தலாம். இன்றைக்கு அத்தகைய ஒரு முயற்சி ஆரம்பமானால் அடுத்த மூன்று மாதத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்தக் கூடியதாக இருக்கும் என்று சுட்டப்படுகின்றது.

ஆனால் மாகாண சபை தேர்தலுக்கான தொகுதி எல்லை நிர்ணயம் முடிந்த பின்னர்தான், அந்தத் தேர்தல் என்று ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்த இலங்கை அரசு, இப்போது தேர்தலை நடத்துவதற்கான அழுத்தம் அதிகமாகி வருகையில் அதை நடத்துவதற்கான பொறுப்பை - பந்தை - எதிர்க்கட்சிக் களந்துக்குள் அடிக்க முடிவு செய்திருக்கிறது போலும்.

மாகாண சபை தேர்தல் குறித்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் எதிர்வரும் மாதத்தில் ஆரம்பக் கட்ட பேச்சுவார்த்தையில் ஈடுபட உள்ளதாக அரசு இப்போது அறிவித்துள்ளது.

அதன்படி சகல தரப்பினரும் ஒருமித்த நிலைப்பாட்டுக்குள் வந்தால் மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்த முடியும் என மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொது நிர்வாக அமைச்சர் சந்தன சந்தன அபேரத்ன தெரிவித்திருக்கிறார்.

அவரது ஆளும் கட்சியைத் தவிர, எதிர்க்கட்சிகள் எல்லாம் மாகாண சபை தேர்தலை விரைந்து நடத்த வலியுறுத்துகின்றன. ஆக, ஆளும் கட்சி மட்டும்தான் எல்லை நிர்ணயத்தின் பின் - அந்தத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கதை விடுகிறது. ஏனைய எதிர்க்கட்சிகள் எல்லாம் பழைய தேர்தல் முறைப்படி மாகாண சபைத் தேர்தல்களை இனியும் தாமதிக்காமல் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கின்றன.

ஆகவே, இது விடயத்தில் இனித்தான் எதிர்க்கட்சிகளுடன் பேசி முடிவெடுக்க வேண்டும் என்ற நிலைமை இல்லை. ஆனால் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல இந்த விடயத்தில் அனைத்துக் கட்சிகளின் உடன்பாடு என்று புது கயிறு விட்டு காலத்தை இழுத்தடிக்க ஆளும்தரப்பு தயாராகிறது என்றே தோன்றுகின்றது.





# மக்கள் பிரச்சினைகளை எழுதி வைத்துப் படிப்பதா?

## விஜய் மீது சீமான் விமர்சனம்

மக்கள் பிரச்சினைகளை எழுதி வைத்துப் படிப்பது என்பது சரியானது அல்ல என்று த.வெ.க. தலைவர் விஜய் மீது நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“ஒவ்வொரு தொகுதியிலும், ஒவ்வொரு ஊரிலும் மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்பதை சொல்லும்போது இதயத்தில் இருந்து வரவேண்டும். அதை எழுதி வைத்துப் படிப்பது என்பது சரியானது அல்ல. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பிடம் எழுதி கொடுத்தால் கூட, மேடையில் ஏறி இதுதான் பிரச்சினை என்பதை படித்து காட்டிவிட்டு சென்றுவிடுவாரே.


தி.மு.க, அ.தி.மு.கவை விட த.வெ.க. தலைவர் விஜய்யை எதிர்ப்பதையே நான் மும்முரம் காட்டுவதாக சொல்கின்றனர். தி.மு.கவை நிறுவியவர் அண்ணா. அ.தி.மு.கவை நிறுவியவர் எம்.ஜி.ஆர். விஜய் இவர்கள் இருவரையும் சேர்த்து தூக்கிக் கொண்டு வருகிறார். இருவரின் படத்தை மேடையில் வைத்துவிட்டால் மட்டும் போதுமா?

அண்ணா மீது எனக்கு பெருமதிப்பு உண்டு. அவரது ஆட்சியில் குறை சொல்வதற்கு ஒன்றுமில்லை. அண்ணா அரசியலுக்கு வந்த பிறகு தான் தமிழரின் வரலாறு, இலக்கியம் எல்லாம் அரசியல் மேடையில் பேசப்பட்டது. அந்தப் பெருமை அண்ணாவையே சேரும். அவரை பற்றி ஒரு அரை மணி நேரமாவது பேச வேண்டாமா?

இலங்கை தமிழர் விடுதலைக்கு உதவிய எம்.ஜிஆரை போற்றுகிறோம். அதேநேரம்ம் தமிழகத்தில் கல்வியை, மருத்துவத்தை தனியார் மயப்படுத்தியது, தமிழில் இருந்து ஆங்கிலத்தை பயிற்று மொழியாக மாற்றியது, முல்லை பெரியாறு அணையை கேரளாவுக்கு தாரைவார்த்தது எல்லாமே எம்ஜிஆர் தானே. அதை ஏற்க முடியுமா?

இதைப் பற்றியும் விஜய் பேச வேண்டும் அல்லவா? நானும் சினிமாவில் இருந்துதான் வந்திருக்கிறேன். ஆனால், களத்தில் நான் மக்களை சந்திக்கிறேன். அவர் ரசிகர்களை சந்திக்கிறார் என்று சீமான் கூறினார்.







# சீமான் - விஜய்க்கும் இடையே 3 ஆம் இடத்துக்கான போட்டி

## அமைச்சர் ஐ.பெரியசாமி கூறுகின்றார்

தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் 2026 இல் சீமானுக்கும் விஜய்க்கும் இடையேதான் மூன்றாம் இடத்துக்கான போட்டி நிலவுகிறது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்தார்.

திண்டுக்கல்லில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“2026ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக ஸ்டாலின் ஆட்சி அமைப்பார். அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இரண்டாம் இடத்துக்கு வர வேண்டும் என முயற்சி செய்கிறார்.

மூன்றாவது இடத்துக்கு யார் வருவது என்பதில் சீமானுக்கும் விஜய்க்கும் இடையேதான் போட்டி நிலவுகிறது. இந்த இருவராலும் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியாது. தி.மு.க. கூட்டணிக்கு 200 இற்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி கிடைக்கும். இந்தத் தேர்தலை பொறுத்தவரை முதல்வருக்கு போட்டி யாரும் இல்லை.

விஜய்க்கு அரசியல் அரிச்சுவடி தெரியாது. பொழுதுபோக்குக்காக விஜய்யை பார்ப்பதற்கு அனைவரும் செல்கின்றனர். பார்க்க வரும் கூட்டம் எல்லாம் வாக்காக மாறாது. கருணாநிதியை போல் மூன்று மடங்கு உழைக்கிறார் ஸ்டாலின். தேர்தல் களத்தில் நாங்கள் ஆற்றும் பணியால் இதுவரை பெறாத வெற்றியை வரும் தேர்தலில் பெறுவோம்.” என்று தெரிவித்துள்ளார்.

# மகாராஷ்டிரா மாநில ஆளுநராக ஆச்சார்ய தேவ்விரத் பதவியேற்பு

மகாராஷ்டிர மாநில ஆளுநராக ஆச்சார்ய தேவ்விரத் இன்று பதவி ஏற்றுக்கொண்டார்.

மகாராஷ்டிரா ஆளுநராக இருந்து வந்த தமிழகத்தைச் சேர்ந்த சி.பி. ராதாகிருஷ்ணன், குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றதை அடுத்து ஆளுநர் பதவியை இராஜினாமா செய்தார்.

இதையடுத்து, குஜராத் ஆளுநர் ஆச்சார்ய தேவ்விரத் துக்கு மகாராஷ்டிராவின் ஆளுநராக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டது. இதற்கான உத்தரவை குடியரசு தலைவர் திரவுபதி முர்மு பிறப்பித்திருந்தார்.

இந்நிலையில், ஆச்சார்ய தேவ்விரத் மகாராஷ்டிர ஆளுநராக பதவியேற்கும் விழா மும்பையில் உள்ள ஆளுநர் மாளிகையில் இன்று காலை நடைபெற்றது. பாம்பே உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசேகர் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். ஆச்சார்ய தேவ்விரத் சமஸ்கிருதத்தில் பதவியேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில், முதல்வர் தேவேந்திர பட்னவிஸ், துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, மாநில அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதையடுத்து, சீருடைப் பணியாளர்களின் அணிவகுப்பு மரியாதையை ஆளுநர் தேவ்விரத் ஏற்றுக்கொண்டார்.



66 வயதாகும் தேவ்விரத், ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்தவர். பா,ஜ,கவின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்து வந்த இவர், கடந்த 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட்டில் இமாச்சலப் பிரதேச ஆளுநராக நியமிக்கப்பட்டார். 2019, ஜூலை வரை அப்பதவியில் இருந்த அவர், பின்னர் குஜராத் ஆளுநராக நியமிக்கப்பட்டார். 2019 முதல் குஜராத் ஆளுநராக இருந்து வரும் ஆச்சார்ய தேவ்விரத், தற்போது மகாராஷ்டிரா ஆளுநராகவும் கூடுதல் பொறுப்பை ஏற்றிருக்கிறார்.



# இந்தியா – ரஷ்யா உறவுகளை சீர்குலைக்கும் முயற்சி தோல்வி

## மொஸ்கோ தெரிவிப்பு!

புது டில்லியுடனான உறவுகளுக்கு தீங்கு விளைவிக்கும் எந்தவொரு முயற்சியும் தோல்வியடையும் என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், மொஸ்கோவுடனான ஒத்துழைப்பைத் தொடர்ந்ததற்காக இந்தியாவை ரஷ்யா பாராட்டியது.

ரஷ்ய எண்ணெயை தொடர்ந்து வாங்குவதற்காக இந்தியப் பொருள்களுக்கு அமெரிக்காவைப் போல் வரிகளை விதிக்க ட்ரம்ப், ஏனைய நாடுகள் மீது அழுத்தம் கொடுத்து வரும் நிலையில், ரஷ்யாவின் இந்த அறிக்கை வந்துள்ளது.

ரஷ்ய வெளிவிவகார அமைச்சு ஞாயிற்றுக்கிழமை அரசு ஊடகமான ஆர்.ரிக்கு அளித்த அறிக்கையில்,

மொஸ்கோவிற்கும் டில்லிக்கும் இடையிலான உறவுகள் நிலையாகவும் நம்பிக்கையுடனும் முன்னேறி வருகின்றன மேலும் இந்த செயல்முறையைத் தடுக்கும் எந்தவொரு முயற்சியும் தோல்வியடையும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

ரஷ்யாவின் எண்ணெய் வாங்குவதை நிறுத்துமாறு அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளின் தொடர்ச்சியான அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து இந்தியா உறுதியாக நின்றதற்கும், அச்சுறுத்தல்கள் இருந்தபோதிலும் அதன் உறுதிப்பாடுகளைத் தொடர்வதற்கும் அது பாராட்டியது.

இரு நாடுகளும் பொதுமக்கள், இராணுவ உற்பத்தி, மனிதர்கள் கொண்ட விண்வெளி பயணங்கள், அணுசக்தி மற்றும் ரஷ்ய எண்ணெய் ஆய்வில் இந்திய முதலீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டுத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளன.


புதிய கட்டண முறைகளை உருவாக்குதல், தேசிய நாணயங்களின் பயன்பாட்டை அதிகரித்தல், மாற்று போக்குவரத்து மற்றும் தளவாட வழிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கூட்டு முயற்சிகளையும் அமைச்சகம் வலியுறுத்தியது.

கடந்த மாதம், பெரும்பாலான இந்தியப் பொருள்கள் மீது அமெரிக்கா கடுமையான வரிகளை விதித்தது.

இதில் 25 வீத அடிப்படை வரி மற்றும் ரஷ்யாவின் எண்ணெய் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை இந்தியா வாங்கியது தொடர்பான கூடுதல் 25 வீத அபராதம் ஆகியவை அடங்கும்.

உக்ரைன் மோதலுக்கு இந்தியா மறைமுகமாகத் தூண்டி விடுவதாக ட்ரம்ப் நிர்வாகம் குற்றம் சாட்டியது. இந்தக் குற்றச்சாட்டை நியாயமற்றது என்று இந்தியா பலமுறை நிராகரித்துள்ளது.

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதற்கான முயற்சிகள் முடங்கியுள்ள நிலையில், இந்த வரிகள் விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்க - சீன அதிகாரிகள் தொடர்ந்தும் வர்த்தகப் பேச்சு

அமெரிக்க மற்றும் சீன அதிகாரிகள், ஸ்பெயினில் இரண்டாம் நாள் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர்.

அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஸ்கொட் பெசென்ட் மற்றும் சீன பிரதி பிரதமர் ஹி லைப்பெங் தலைமையிலான நேற்றைய பேச்சுவார்த்தைகள், சர்வதேச ரீதியாக இரண்டு பாரிய பொருளாதார நாடுகளுக்கு இடையேயான வர்த்தகப் போரை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான அண்மைக்கால முயற்சி எனக் கருதப்படுகிறது.

சீனா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த உயர்மட்ட வர்த்தகப் பிரதிநிதிகள் இறுதியாகக் கடந்த ஜூலை மாதம் சந்தித்தனர்.

அந்தச் சந்திப்பின் போது அவர்கள் தமது வரிப் போர் நிறுத்தத்தை, நவம்பர் 10ஆம் திகதிவரை மேலும் 90 நாள்களுக்கு நீடிக்க ஒப்பந்தத்தை மேற்கொண்டனர்.

அமெரிக்க ஜனாதிபதி தனது முதலாவது பதவிக் காலத்தில் டிக்டொக்கை தடைசெய்ய வேண்டும் எனத் திட்டமிட்டிருந்தார்.

இருப்பினும் பின்னர், பிரபலமான இணையதளப் பகிர்வு செயலி குறித்து தனது நிலைப்பாட்டை அவர் மாற்றியிருந்தார்.

இதுதவிர, ஏற்கனவே மூன்று தடவைகள் தடையினைத் தாமதப்படுத்தியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இன ரீதியான அச்சுறுத்தலை பொறுத்துக்கொள்ள முடியாது

## பிரித்தானிய பிரதமர் கண்டனம்





இனரீதியானஅச்சுறுத்தலைப்பொறுத்துக்கொள்ள முடியாது எனப் புலம்பெயர்ந்தோருக்கு எதிராக நடத்தப்பட்ட பேரணிக்குப் பிரித்தானியப் பிரதமர் கெயர் ஸ்டார்மர் கண்டனம் தெரிவித்துள்ளார்.


பிரித்தானியாவில், வெளிநாடுகளிலிருந்து வந்து குடியேறுபவர்களுக்கு எதிராக, அந்த நாட்டின் தீவிர வலதுசாரி ஆர்வலர்கள் யுனைட் தி கிங்டம் எனும் பெயரில் லண்டனில் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தப் பேரணியில் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

பேரணியில் போராட்டக்காரர்கள் மற்றும் பொலிஸார் இடையே ஏற்பட்ட மோதலில், 26 பொலிஸார் காயமடைந்தனர்.

இதனையடுத்து, சம்பவத்துடன், தொடர்புடைய 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்தப் போராட்டத்திற்குப் பிரித்தானியப் பிரதமர் கெயர் ஸ்டார்மர் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.





# மருதானை ரயில் நிலையத்தினை நவீனமயமாக்கும் திட்டம் ஆரம்பம்

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துடன் இணைந்த வகையில், **Dream Destination** திட்டத்தின் கீழ் மருதானை ரயில் நிலையத்தை நவீனமயமாக்கும் திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முற்பகல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

“வளமான நாடு - அழகான வாழ்க்கை” உருவாக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் படி நிலைபேறான, நவீன மற்றும் தரப்படுத்தப்பட்ட பொது போக்குவரத்து கட்டமைப்புடன்கூடிய அழகான வாழ்க்கை முறையை அடைவதற்காக, ரயில் நிலையங்களில் பொது வசதிகளை மேம்படுத்தல், ரயில் நிலையங்களை வசதியான மற்றும் பாதுகாப்பான இடங்களாக மாற்றும் நோக்கத்துடன், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு மற்றும் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம், தேசிய புத்திஜீவிகள் அமைப்பு அரச-தனியார் பங்களிப்பின் கீழ் நாட்டில் நூறு ரயில் நிலையங்களை நவீனமயமாக்கும் தேசிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

விசேட தேவைகள் உள்ள சமூகம் உட்பட அனைத்துப் பயணிகளுக்கும் பாதுகாப்பு மற்றும் வசதியை வழங்கும் சுத்தமான, அழகான ரயில் நிலைய கட்டமைப்பை நாட்டில் உருவாக்குவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து மருதானை ரயில் நிலையத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ரயில் நிலையத்தில் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டதுடன் கட்டுப்பாட்டு அறை உட்பட பல இடங்களையும் பார்வையிட்டார்.

ரயில் திணைக்களத்திற்கே உரித்தான “ருஹுனு குமாரி” என்ற புதிய சிங்கள கணினி எழுத்துருவும் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ரயில் நிலையமாக கருதப்படும் மருதானை ரயில் நிலையம், கொழும்பு மாவட்டத்தில் இரண்டாவது பெரிய ரயில் நிலையமாக கருதப்படுகிறது. இந்த நவீனமயமாக்கல் பணிகள், இதன் புராதனத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படாமல் மேற்கொள்ளப்பட உள்ளன.









## எமமினம் எப்படி காந்தியத்தை நம்பும்?

**(தியாக தீபம் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு இக்கவிதை பிரசுரிக்கப்படுகிறது.)**

ஊரெழு பெற்ற தவப் புதல்வனே
அண்ணா பார்த்தீபன்
அகிம்சைக்கே அகிம்சையைப் போதித்தாய்

இழந்து முப்பத்தெட்டு ஆண்டுகள்ஆகிறது
இருந்தும் அண்ணன்
இறந்து தந்த வலி அகலவில்லை

தீயாகதீபமாய் நெஞ்சினில் குடியேறி
தேச விடுதலைக்காய் நீ செய்த தியாகம்
எம் நெஞ்சை விட்டு அகலவில்லை

அணுவணுவாய் செத்தாய்
விடுதலையே மூச்சென எண்ணிணாய்
அன்பு மக்களே எனக் கத்தினாய்

உனது குரல் கேட்டு
ஓவென அழுது கொண்டது
கூடியிருந்த தமிழ்ச்சனம்

காந்திய தேசம் ஆடையிழந்தது
அயலுறவு சந்தி சிரித்தது
இப்பவும் நம்பும் சில கூட்டம்

காந்தியத்தின் காலடியில் அல்லவா
காவியப் புதல்வனை இழந்தோம்
வெட்கி தலைகுனிக காந்திய நாடே

அன்று அண்ணன் கிழித்த
இந்திய அகிம்சை முகத்திரை
இதுவரை தொங்கிக் கொண்டிதானிருக்கிறது

அண்ணன் சாகக் காரணத்தானை
அட நானெப்படி சகோதரனென்பேன்
சிலது இப்பவும் 13 என்கிதுகள்

நீ காட்டிய வழியில் பயணிக்கும்
எமமினம் எப்படி காந்தியத்தை நம்பும்
நீ பசியோடு அல்லவா இருக்கிறாய் பார்த்தீபா..?



**கஜீபன் தங்கராசா**

## திலீபனின் நினைவு ஊர்திக்கு காரைதீவில் உணர்வுபூர்வ அஞ்சலி











**( வி.ரி.சகாதேவராஜா)**

தியாக தீபம் திலீபனின் 38வது நினைவு தின ஊர்திக்கு காரைதீவில் பெருவரவேற்புடன் கூடிய உனர்வு பூர்வ அஞ்சலி நிகழ்வு முன்னாள் தவிசாளர் கி.ஜெயசிறில் தலைமையில் நேற்று திங்கட்கிழமை பகல் நடைபெற்றது.

தியாகி திலீபனின் 38 ஆவது நினைவேந்தல் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் முன்னெடுக்கப்பட்டு வரும் தியாகி திலீபன் நினைவு ஊர்திப் பயணமானது நேற்றைய தினம் திருக்கோவில் பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் துசானந்தன் தலைமையில் இடம்பெற்ற ஊர்திப் பயணம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் சகிதம் திருக்கோவிலில் ஆரம்பித்து பொத்துவில், ஆலையடிவேம்பு பிரதேசங்களில் மக்களின் அஞ்சலியினைத் தொடர்ந்து காரைதீவை அடைந்தது.

காரைதீவில் முன்னாள் தவிசாளரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச கிளைத் தலைவருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் அஞ்சலி ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஊர்தியானது உணர்வுபூர்வமாக வரவேற்கப்பட்டு பொது மக்களின் அஞ்சலிகள் இடம்பெற்றன.

இதன்போது தவிசாளர் சு.பாஸ்கரன் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது ஜெயசிறில் அவர்கள் தியாக தீபம் திலீபன் அவர்களுக்கு மக்களுடன் இணைந்து மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதுடன் காரைதீவு பிரதேசத்திலிருந்து நினைவு ஊர்தியினை பற்றோடு வழியனுப்பி வைத்தார்.

# கிளிநொச்சியிலும் திலீபனின் நினைவேந்தல்

தமிழ் மக்களின் உரிமைக்காக 12 நாள்கள் உணவையும் நீரையும் ஒறுத்து உயிர்த்தியாகம் செய்த தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சியில் இலங்கை தமிழரசுக்கட்சியின் மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் நேற்று உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இங்கு...




















# முல்லைத்தீவிலும் திலீபனின் நினைவேந்தல்

(பா.சதீசன்)

தியாகதீபம் திலீபனின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் முல்லைத்தீவு - கள்ளப்பாடு பகுதியில் அமைந்துள்ள வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் நேற்று இடம்பெற்றது.

தியாகதீபம் திலீபனின் திருஉருவப்படத்திற்கு மலர்தூவி, சுடரேற்றப்பட்டு, நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டன.

மாவீரர் ஒருவரின் தாயாரான செ.தவராணி ஈகைச்சுடரை ஏற்றி நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி அஞ்சலிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த அஞ்சலி நிகழ்வுகளில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுடன் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.





# உத்தேச மின்சார கட்டணம் தொடர்பில் பொது ஆலோசனை கோரப்படுகிறது

PUCSL

இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டுக்கான மூன்றாவது மின்சார கட்டண திருத்தம் குறித்த பொது ஆலோசனையை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கோரவுள்ளது.

அதன்படி, பொதுமக்கள் மற்றும் தொடர்புடைய தரப்புகளிடமிருந்து எழுத்துப்பூர்வ கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் எதிர்வரும் ஒக்டோபர் 7 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும், எதிர்வரும் 18 ஆம்திகதி முதல் ஒக்டோபர் 8 ஆம் திகதி வரை ஒன்பது மாகாணங்களில் வாய்மொழி ஆலோசனைகள் சேகரிக்கப்படும் என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாய்மொழி மூல ஆலோசனை அமர்வுகள் திருகோணமலை, மொனராகலை, புத்தளம், கிளிநொச்சி, காலி, பொலன்னறுவை, கேகாலை, நுவரெலியா மற்றும் கொழும்பில் நடைபெற உள்ளன.

பங்கேற்க விரும்பும் பொதுமக்கள் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, வழங்கியுள்ள தொடர்பு எண்கள் மூலம் முன்கூட்டியே பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

எழுத்துப்பூர்வ சமர்ப்பிப்புகளை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு, 6 ஆவது மாடி இலங்கை வங்கி வர்த்தக கோபுரம், இல.28 புனித மைக்கல் வீதி கொழும்பு - 03 என்ற முகவரிக்கு அனுப்ப முடியும், அல்லது தொலைநகல் (011-2392641), WhatsApp (076-4271030) அல்லது மின்னஞ்சல் (info@pucsl.gov.lk) வழியாக அனுப்பலாம்.

இலங்கை மின்சார சபையினால் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மின்சார கட்டணத் திருத்த முன்மொழிவு மற்றும் அது தொடர்பான ஆலோசனை பத்திர அறிக்கைகளை www.pucsl.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.





# கொழும்பு மத்திய பஸ் நிலைய நவீனமயமாக்கல் திட்டம் ஆரம்பம்

"கிளீன் ஸ்ரீலங்கா" திட்டத்துடன் இணைந்ததாக கொழும்பு மத்திய பஸ் நிலைய நவீனமயமாக்கல் திட்டம் நேற்று திங்கட்கிழமை காலை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

"வளமான நாடு – அழகான வாழ்க்கையை" உருவாக்கும் அரசின் திட்டத்துக்கு இணங்க, "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டத்தின் கீழ் 425 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி இந்த நவீனமயமாக்கல் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

60 ஆண்டுகளின் பின்னர் இந்த பஸ் நிலையம் முழுமையாக மூடப்பட்டு அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன மற்றும் கவர்ச்சிகரமான பஸ் நிலையமாக முழுமையாக அபிவிருத்தி செய்யப்படும் முதல் சந்தர்ப்பம் இது என்பது விசேட அம்சமாகும்.

இலங்கை விமானப் படையின் நேரடி ஆளணி பங்களிப்பு மற்றும் கொழும்பு மாநகர சபை, இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ,வீதி அபவிருத்தி அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட ஏனைய தொடர்புடைய நிறுவனங்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்புடன் இது செயற்படுத்தப்படுகின்றது.

அதேநேரத்தில் தேசிய புத்திஜீவிகள் அமைப்பு உள்ளிட்ட அமைப்புகளும் இதில் தன்னார்வமாகப் பங்கேற்கின்றன.

இந்தத் திட்டம் 2026 ஏப்ரல் மாதத்தில், சிங்கள – தமிழ்ப் புத்தாண்டுக்கு முன்னர் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, பொதுப் போக்குவரத்தை வலுப்படுத்தாமல் ஒரு நாடு வளர்ச்சியடைய முடியாது என்று கூறினார்.

பொதுப் போக்குவரத்து என்பது ஒரு நாட்டின் பொருளாதார செயல்முறையின் முக்கிய பகுதியாகும் என்பதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், மக்களுக்கு வசதியான மற்றும் குறைந்த செலவுள்ள பொதுப் போக்குவரத்து சேவையை வழங்குவதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை அடைவதை விரைவுபடுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

நினைவுப்பலகையைத்திறந்துவைத்து கொழும்பு மத்திய பஸ் நிலையத்தின் புனரமைப்புப் பணிகளைத் தொடங்கி வைத்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, அந்த வளாகத்தைச் சுற்றிப் பார்வையிட்டார்.

பிரதி சபாநாயகர் மொஹமட் ரிஸ்வி சாலி, நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேல் மாகாண ஆளுநர் ஹனிப் யூசுப், கொழும்பு மேயர் வ்ராய் கெலீ பல்தசார், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொந்தா மற்றும் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகள் குழு, கிளீன் ஸ்ரீலங்கா செயலக அதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.









# வவுனியா விபுலாநந்தாக் கல்லூரியின் நிதிக்காக திண்டுக்கல் லியோனின் பாட்டு மன்றம் நிகழ்ச்சி



(கி.வசந்தன்)

வவுனியா விபுலாநந்தா கல்லூரியின் கல்வி மற்றும் பௌதீக வள தேவைக்கு நிதி திரட்டும் முகமாக பழைய மாணவர் சங்கம் நடத்தும் திண்டுக்கல் லியோனியின் “பாட்டுமன்றம்” நிகழ்வுக்கான முதலாவது டிக்கட்டை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

பாடசாலையின்கல்விமற்றும்பௌதீக வள தேவையை கருத்தில் கொண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கம், வவுனியா தொழில்சார் ஊடகவிய லாளர்கள் ஆகியோரின் பங்களிப் புடன் பழைய மாணவர் சங்கத்தால் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு வவுனியா மாநகர சபை கலாசார மண்டபத்தில் இந்த நிகழ்வு நடத்தப்படுகின்றது.

இதற்கான டிக்கற் அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர், உப அதிபர்கள், ஊடகவியளா ளர்கள், பாடசாலை அபிருத்தி சங்கச் செயலாளர், பழைய மாணவர் சங்கச் செயலாளர் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் மான் இறைச்சியுடன் ஒருவர் கைது!

(பா.சதீசன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைவேலியை பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் மான் இறைச்சியுடன் நேற்றையதினம் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கைவேலி பகுதியில் நடத்தப்பட்ட விசெட சோதனை நடவடிக்கையில் 3 கிலோ கிராம் மான் இறைச்சியெள உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைவேலி பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் விசாரணைகளின் பின்னர் இன்றையயதினம் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் எனொ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ஆசான் க.சிவராமலிங்கம்பிள்ளையின் நூற்றாண்டு பிறந்த தினம் இன்றாகும்

**பேராசான் கலாநிதி க.சிவராமலிங்கம் பிள்ளை அவர்களின் நூற்றாண்டு அகவை தினம் இன்று 16.09.2025 செவ்வாய்க்கிழமை ஆகும். இன்றைய நாள் மாலை 4 மணிக்கு குடும்பத்தவர்கள் சார்பில் ஒரு நினைவேந்தல் அவரது இல்லத்தில் உள்ள அறிவாலய அரங்கில் நடைபெறுகின்றது. பேராசானின. நூற்றாண்டு நினைவேந்தல் குழு அங்கு ரார்ப்பணமும் இன்று நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.**
**பேராசானின் நூற்றாண்டு அகவை தினத்தை ஒட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

**- கலாநிதி ஆறு.திருமுருகன் -**

தமிழ் ஆற்றலாளர் பலரை உருவாக்கிய ஆசான் க.சிவராமலிங்கம் பிள்ளை அவர்களின் நூற்றாண்டு பிறந்த தினம் இன்றாகும்.

ஈழத் திருநாட்டில் பல சான்றோர்களை நம்மண்ணுக்குத் தந்த புங்குடுதீவு கிராமத்தில் 16-09-1925ஆம் ஆண்டு சைவ சித்தாந்த அறிஞரும் சிறந்த ஆயுள்வேத வைத்தியருமாகிய கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளுக்கு மைந்தனாக இப்பெருமகனார் பிறந்தார். சிவபூசையும் சைவசித்தாந்தப் பாரம்பரியமும் பேணிய இக்குடும்பத்தில் பிறந்த இவர் புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாசாலையிலும், யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றார்.

1941ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் தனது கல்வியைத் தொடர்ந்தார். இந்துக் கல்லூரி வாழ்வில் தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி வாகை சூடினார். கல்லூரி நாடக அரங்குகளில் பங்கு கொண்டு பிரபல்யம் பெற்றார். கல்லூரியின் சிரேஷ்ட மாணவ முதல்வனாகவும், விடுதிச்சாலை மாணவ முதல்வனாகவும் விளங்கினார். பாடசாலை விவாதக் குழுவில்

தலைமை தாங்கி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியோடும், யாழ் மத்திய கல்லூரியோடும் ஆங்கில விவாதப் போட்டிகளில் பங்குபற்றி பாராட்டுப் பெற்றார். அதிபர் ஏ.குமாரசாமி அவர்கள் இவரது திறமையைக் கண்டு பெரிதும் பாராட்டினார். பாடசாலை மாணவனாக கற்கும் போதே சைவபரிபாலன சபை நிகழ்ச்சியில் ஆசிரியர் மயில்வாகனம் வாய்ப்பை ஏற்படுத்தினார். சைவபரிபாலன சபை மாநாட்டில் இந்திய அறிஞர்கள்

சபையில் பாராட்டுப் பெற்றார். விஞ்ஞானத் துறையில் கற்றுக் கொண்டிருந்த இவர் தமிழில் கொண்ட ஆர்வம் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று பேரறிஞர்களிடம் கற்றுத் தேறினார். அங்கு பட்டம் பெற்று நாடு திரும்பியதும் 1950இல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நிர்வாகம் இவரை ஆசிரியராக நியமித்தது. 1950முதல் 1985 வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பணியாற்றினார்.

கல்லூரியில் இருமொழிப் புலமை மிக்க ஆசானாக சீரிய புலமையும் ஆளுமையும் மிக்க ஆசிரியரவர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டு அவரது ஒருகால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. எனினும் மனம் தளராது கோலூன்றியவாறு வகுப்பறைகளில் கற்பிப்பதோடு மேடைகளில்



அருந்தமிழ் முழக்கம் செய்து வந்தார். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எந்தத் தமிழ் விழாவிலும் சைவ சமய விழாவிலும் இவரது உரை முக்கிய இடம்பெற்றது. இவரிடம் கற்றவர்கள் இலக்கிய உலகில் நன்கு பிரகாசித்தனர். சுந்தரர் டிவகலாலா, செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை போன்ற அறிஞர்கள் இவரது தலை மாணாக்கர்கள் எனலாம். பல நூற்றுக் கணக்கான மாணவர்களை மேடையேற்றிப் பேசவைத்த பெருந்தகை இவர். அகில இலங்கை கம்பன் கழகப் பிதாமகன் கம்பவாரிதி முதல் என் போன்ற பலரை இந்துக் கல்லூரி மேடைக்கு அறிமுகம் செய்தவர். ஏழை மாணவர்கள் மீது என்றும் இரக்கம் காட்டுபவர். அவரது இரக்கம் பற்றி விடுதிச்சாலையில் இருந்த மாணவர்கள் இன்றும் சொல்லி மகிழ்வார்கள். தூய வெள்ளைவேட்டி, வெள்ளைச் சேட், திருநீறு, சந்தனம் அவரது சிறந்த மேனியை மேலும் அழகுபடுத்தும். "ஷேக்ஸ்பியர் பற்றியும் பேசுவார் சேக்கிழார் பற்றியும் பேசுவார்". அவரது இரு மொழிப் புலமை பலருக்கு பயன்தந்தது. அவர் இறக்கும் வரை நேர்முகப் பரீட்சைக்கு செல்பவர்கள் அவரிடம் நற்சான்று பெறக் காத்திருப்பார்கள்.

ஆசானின் மாணவர்கள் பேராசிரியர்களாக, அரச அதிபர்களாக, பிரதேச செயலர்களாக, சிறந்த கல்வியாளர்களாக விளங்கினர். ஆரம்பத்தில் விஞ்ஞானத்துறையிலும் சிறப்பாக கற்பித்த காரணத்தினால் பல் துறைசார்ந்த விற்பன்னர்கள் இவரிடம் கற்றவர்களாக விளங்கினர். ஆசிரியர் கலாசாலையில் சில வருடங்கள் விரிவுரையாளராக பணியாற்றினார். அதனால் பல ஆசிரிய மாணவர்கள் இவரிடம் கற்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

சைவசித்தாந்த அறிவும், தமிழ் இலக்கண, இலக்கிய அறிவும் மிக்க இவரிடம் பல்கலைக்கழக மாணவர்களும் சென்று கற்றனர். இவரது கந்தர்மடம் வீடு அன்றும் இன்றும் அறிவாலயமாகவே திகழ்கிறது.

கம்பன் கழகக் காவலராக விளங்கிய எங்கள் ஆசானிடம் ஒன்பதாம் வகுப்பு முதல் தமிழ் கற்கும் பேறு சிறியேனுக்கு கிடைத்தது. எனது தாய், தந்தை இருவரும் ஆசிரியர்கள். எனது தாயார் யாழ் இந்துக் கல்லூரி குருளைச் சாரண ஆசிரியராக விளங்கியவர். அதனால் குடும்ப நட்பாக எனக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு நீண்டது. எனது முன்னேற்றத்தில் மிகவும் அக்கறையாக விளங்கினார். கம்பன் கழகத்தில் எதிரும் புதிருமாக பட்டிமன்றம்

தொடர்ச்சி ▼

## மங்கிடாப் புகழாளன்!

எங்களின் குருவாயும், 'இது திசை'
என்று ரைத்த 'கலங்கரை'யாகவும்,
சங்கை மிக்க 'யாழ் இந்து' ஆசான்களில்
தனித்தொளிர்ந்த 'பிதாமக னாகவும்',
சிங்கமாகக் கால் பழுதுபட் டாலும்... உள்
சீற்றம் குறையாது 'வாழ்ந்து... உயர்ந்த' நம்
'மங்கிடாப் புகழாளன்' 'சிவராம-
லிங்கம்' மாஸ்ரரை.. நெஞ்சால் வணங்குவோம்!

கற்ற கல்வியால் பெற்ற கம்பீரமும்,
கலை மொழி தேர்ந்து கொண்ட மிடுக்கதும்,
மற்ற வர்க ளிற்காய்த் தன் இயலாமை
மறைத்து... உதவிடும் ஈகைக்குணப் பண்பும்,
உற்ற துன்பம் பொறுத்து... ஊர் உலகிற்
குழைத்தும் தன்நலம் எண்ணாத் தியாகமும்,
நற்றமிழ் சைவம் பேசி அறம் சொல்லுஞ்
ஞானமும், கொள் 'சிவ ராமர்க்கு' ஈடுயார்?

'மூன்று சக்கரச் சைக்கிளாம் தேரிலே'
மூலை முடுக்குகள் யாவும் நிதம் சென்று,
ஆன்றோர் தொட்டு அசடர் வரை நட்பை
ஆண்டு, யார்யா ருக்கோ கரம் தந்து,
சான்றோ னாகவும், 'நாட்டாமை' போலவும்,
தமிழடியார்க்குப் 'பிரம்ம ரிஷி'யாயும்,
தோன்றி - மறைந்தின்று இருபது ஆண்டுகள்
தொலைந்ததா? 'ஐயன்' நினைவுகள் நீறுமா?

'ஆசான் - மாணவர்' உறவுக் குதாரணம்
ஆனவர் 'லிங்கர்' ஆற்றுப் படுத்தியும்,
பேச வைத்தும், பிரபலம் ஆக்கியும்,
'பின்னிற்க'...மாணாக்கரோ 'முன்வைத்து'
தேசம் தேசமாய்க் காவித் திரிந்தனர்!
சேவை செய்தனர் கடைசி வரை அவர்
பாசம் கண்டவர்... இன்று "நூற்றாண்டு
அகவை நாளில்" பணிந்துஞ் சலிக்கிறோம்!

**த.ஜெயசீலன்**

# ஆசான் க.சிவராமலிங்கம்பிள்ளையின் நூற்றாண்டு பிறந்த தினம் இன்றாகும்

**தொடர்ச்சி▲**

விவாத அரங்குகளில் பேசும் வாய்ப்பு கிட்டியது. மேடையால் இறங்கியதும் நல்லாய் பேசினாய் என்று முதுகில் தட்டி பாராட்டுவார். கம்பவாரிதி நடுவராக வீற்றிருக்க அணித்தலைவராக அவரது ஆசிரியராகிய சிவராமலிங்கப்பிள்ளை பேசுவார். இத்தகைய பெருந்தன்மை இன்று யாரிடம் உள்ளது? எவரது பிரச்சினையையும் தீர்த்துவைக்கும் மனிதநேயர். மற்றவர்களுக்காக தனது முச்சக்கர வண்டியில் எங்கும் சென்று வருவார். அவரது ஆசிரிய நண்பர்கள் இவரை ஒரு தலைமகனாகவே கொள்வர்.

இவர் இறப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு ஆசிரியர் க.சொக்கலிங்கம்(எழுத்தாளர்.சொக்கன்) இறந்தார். என்ன ஆச்சரியம் செம்மணிச் சுடலையில் எங்கள் ஆசான் முச்சக்கர வண்டியில் தானே ஒடிவந்து விட்டார். சுடலையில் “தேவன், சோமன், சொக்கன் போய்விட்டார்கள், எனி இராமனும் போகத்தானே வேணும்!”

என்று கண்ணீர் விட்டார். சேட் கொலருக்குள் எப்பவும் கைத்துண்டு வைத்திருப்பார். கைத்துண்டை எடுத்துக் கண்ணைத் துடைத்து துடைத்து நண்பனுக்காய் அழுதார்.

என்றும் உயர்ந்த பண்புகள் கொண்ட எங்கள் ஆசான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் நீண்டகால ஆலோசகராக விளங்கினார். நடமாடும் கலைக் களஞ்சியமாக திகழ்ந்தார். என் அன்புக்குரிய ஆசான் இறப்பதற்கு சில வாரங்களுக்கு முன்பு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் கண்டு கண்தானப் படிவத்தைத் தா என்று வலியுறுத்தினார். நான் நகைச்சுவையாக அவரோடு பேசினேன். “நான்

சீரியசாகப் பேசுகிறேன். படிவத்தைக் கொண்டுவா!“ என்று கட்டளை இட்டார். மறுநாள் படிவத்தைக் கொடுத்தேன். கண்தானப் படிவத்தை நிரப்பியதோடு கடிதம் ஒன்றும் எழுதித் தந்தார். தன் இறப்புக்குப் பின்னால் இரண்டு கண்களையும் எடுத்து பார்வை பிரச்சினை உள்ளவர்களுக்கு கொடுங்கள். இதற்கு எனது பரிபூரண சம்மதம் என எழுதினார். என்ன ஆச்சரியம், ஒருமாத காலத்துக்குள்ளேயே திடீரென ஆசிரியர் இறந்தார். அவரது இறுதி ஆசைப்படி பேரப்பிள்ளைகளின் ஒத்துழைப்போடு யாழ்ப்பாணம் கரையூரைச் சேர்ந்த ஒரு நபருக்கு ஆசானின் கண்கள் எடுத்துப் பொருத்தப்பட்டன. கண் வைத்திய நிபுணர்

டாக்டர் குகதாசன் அவர்களும் டாக்டர் செல்வி சரவணமுத்து அவர்களும் இப்பணியை நிறைவேற்றினர்.

அவர் வாழும்போது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நாவலர் பெருமானுக்கு உருவச்சிலை வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதனை நிறைவேற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. சிலை திறப்பு விழாவில் அவர் ஆற்றிய உரை இன்றும் பசுமையாக உள்ளது.

அன்னாரின் இறுதி வைபவத்தில் தலைமை தாங்கி உரையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கண்ணீரோடு எங்கள் ஆசானின் இறுதிநாள் கழிந்தமை மறக்கமுடியாது. பலருக்குள் வாழும் இப்பெருவிருட்சம் பிறந்த நூற்றாண்டு விழாவில் நன்றியோடு நினைந்து போற்றுவோம்.

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு“

# 24 பேர் பலியான மந்துவில் படுகொலையின் 26ஆவது ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு




**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மந்துவில் சந்திக்கு அருகாமையில் 1999 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி விமானப்படை விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொது மக்களுடைய 26 ஆம் ஆண்டு நினைவு நேற்று தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அன்றைய நாளில் 24 அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அதன் 26 ஆவது ஆண்டு வலிதீரா நினைவு மந்துவில்லில் இறந்தவர்களின் உறவுகளாலும் மக்களாலும் சுடரேற்றி மலர்தூவி கண்ணீருடன் நினைவு கூரப்பட்டது.

இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற மந்துவில் சந்தி வளாகத்தில் உணர்வுபூர்வமாக நேற்றிய நிகழ்வு ன்னெடுக்கப்பட்டது

தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் அமைப்பின் தலைவர் த.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் சிவபாதம் குகநேசன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஞா.யூட் பிரசாத், தாய்த்தமிழ் பேரவையின் ஸ்தாபகர் ச.சத்தியரூபன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், சமூகசெயற்பாட்டாளர்கள்,உட் [illegible] டிருந்தனர்.









# சாயி ஸ்ருதி லயா நுண்கலை கூடத்தின் சிறப்பு நிகழ்வு

சாயி ஸ்ருதிலயா நுண்கலைக் கூடத்தின் இயக்குநர் வைத்திய கலாநிதி கலை இளவரசி செல்வி சாயிலக்ஷ்மி லோகீஸ்வரனின் நெறியாள்கையில் சாயி ஸ்ருதிலயா நுண்கலைக்கூடம் தனது ஒரு தசாப்த சேவை நிறைவை முன்னிட்டு நுண்கலைக் கூட மாணவர்களின் சிறப்பு நிகழ்வொன்றை கொழும்பு, வெள்ளவத்தை, உருத்திரா மாவத்தை, 23ஆம் இலக்கத்தில் உள்ள சைவ மங்கையர் கழக மண்டபத்தில் கடந்த 13ஆம் திகதி சனிக்கிழமை மாலை நடத்தியது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், சிறப்பு அதிதியாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத் தின் பணிப்பாளர் வை.அனிருத்தனன் ஆகியோர் பங்குபற்றினர். அவர்கள் ஆசிரியர், மாணவர்களால் வரவேற்கப்படுகின்ற மையையும், மாணவர்களின் கலை நிகழ்வையும் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.












# குமுழமுனை ஆறுமுகத்தான்குளம் கிராமத்திற்குள் புகுந்து மாணவர்களைத் துரத்திய காட்டு யானை!





(பா.சதீசன்)

குமுழமுனை ஆறுமுகத்தான்குளம் கிராமத்திற்குள் நேற்றுக் காலை புகுந்த காட்டு யானையினால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கிராமத்திற்குள் நுழைந்த காட்டு யானை ஆறுமுகத்தான் அ.த.க பாடசாலை அருகாமையிக் மாணவர்களை நேற்றுக் காலை துரத்தியுள்ளது.

இந்தனால் பாடசாலைக்கு மாணவர்கள் வராமையினால் பாடசாலை நிர்வாகத்தினரால் வலயகல்வி பணிமனைக்குத் தகவல் வழங்கப்பட்டது. அதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த வலயகல்வி பணிமனையினர் பாடசாலைக்குள் இருந்த 10 மாணவர்களையும் பெற்றோரை அழைத்து பாதுகாப்பாக அனுப்புமாறு கூறிவிட்டுச் சென்றனர்.

பாடசலைக்கு அருகில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து யானை பொருச்களைச் சேதப்படுத்தியுள்ளது. ஊர்மக்கள் இணைந்து யானையை விரட்ட முடியாதமையினால் வன ஜீவராசிகள் திணைகளத்தினருக்கு தகவல் வழங்கினர். அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானையை விரட்டி விட்டுள்ளனர்.

இந்தக் காட்டுயானை கிராமத்திற்குள் மூன்று மணித்தியாலயங்களுக்கு மேலாக நின்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடதக்கது.

# அஷ்ரப்பின் 25ஆவது ஆண்டு நினைவேந்தல் நிந்தவூர் அல்-அஷ்ரக் பாடசாலையில் இன்று

## நினைவுப் பேருரை நிகழ்த்துகின்றார் சுமந்திரன்



(பாறுக் ஷிஹான்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடத்தும் பெருந்தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் 25 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 'தோப்பாகிய தனி மரம்' எனும் தொனிப்பொருளில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 04 மணிக்கு நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் காஸிமி கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸின்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பைஸல் காசிம் வரவேற்புரை நிகழ்த்துவார். முஸ்லிம் முழக்கம் மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீத்தின் 'ஓயாத புயலும் சாயாத மரமும்' எனும் நூலும் வெளியீட்டு வைக்கப்படவுள்ளது. இந் நூலைப் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் நூலாய்வு செய்கிறார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.ஏ. சுமந்திரன் நிகழ்வில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் நிகழ்வுரை நிகழ்த்துகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியும் முஸ்லில் காங்கிரஸின் செயலாளருமான நிஸாம் காரியப்பர் ஏற்புரை வழங்குகிறார்.

இந்நிகழ்வில் நூல் வெளியீடு, விவரணப்படம், நினைவேந்தல் பாடல், துஆப் பிரார்த்தனை உட்பட மேலும் பல நிகழ்வுகளும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
நடாத்தும்

பெருந்தலைவர் அஷ்ரஃப் அவர்களின் 25ஆவது
நினைவேந்தல்

தோப்பாகிய தனிமரம்

நிகழ்வுக்கு
உங்களை அன்புடன் அழைக்கிறோம்

16.09.2025
செவ்வாய் கிழமை
பிற்பகல் 4.00 மணி

கமு/அல் அஷ்ரக் தேசிய பாடசாலை
காஸிமி கேட்போர் கூடம்
(Cassimi Auditorium)
நிந்தவூர்.

தாருஸ்ஸலாம்
கொழும்பு 2

நிகழ்ச்சி நிரல்

கிராஅத்
கட்சி கீதம்

வரவேற்புரை
பைஸல் காசிம்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

முஸ்லிம் முழக்கம் மர்ஹூம் ஏ. எல். அப்துல் மஜீத் அவர்களின்
"ஓயாத புயலும் சாயாத மரமும்" நூல் ஆய்வு
பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ்

நூல் வெளியீடு

விவரண திரைப்படம்

நினைவுப் பேருரை
ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

நினைவேந்தல் பாடல்

நிகழ்வுரை
சட்ட முதுமாணி ரவூப் ஹக்கீம் பா.உ
தேசியத் தலைவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

துஆப் பிரார்த்தனை

ஏற்புரை
ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் பா.உ

தேசிய கீதம்

(தொழுகைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன)



# முஸ்லிம்களை ஒன்றிணைத்த ஆளுமை அஷ்ரப்

## இன்று அவரது 25ஆவது ஆண்டு நினைவு தினம்

-யூ.கே. காலித்தீன்-

அன்று, 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 16 ஆம் திகதி சனிக்கிழமை. அன்று மிகப் பெரும் துயரத்தைக் கொண்ட நாளாக விடியும் என்று எவருமே நினைத்திருக்கவில்லை. அன்று காலை 9.05 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்திலிருந்து இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்று கிழக்கு நோக்கிப் பறந்து சென்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், தேசிய ஐக்கிய முன்னணியின் ஸ்தாபகரும், ஜனாதிபதி சட்டத்தரணியும், துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சருமான எம்.எச்.எம்.அஷ்ரப் அன்று காலை இறக்காமத்தில் நடைபெறவிருந்த கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக மேலும் 14 பேருடன் அந்த ஹெலிக்ல்கொப்டரில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

கொழும்பிலிருந்து 110 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அரநாயக்கப் பகுதியில் இருக்கும் 'பைபில் றொக்' (Bibil Rock) மலைப்பகுதியின் மேலாக அந்த ஹெலிக்கொப்டர் பறந்து கொண்டிருந்த போது திடீர் விபத்துக்குள்ளானது. பலத்த வெடியோசையுடன் தீப்பிழம்பாக வானத்தில் அது வெடித்துச் சிதறியது. அமைச்சரும் அவருடன் பயணம் செய்த மேலும் 14 பேரும் அந்த விபத்தின் போது அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

ஹெலிக்கொப்டர் சிதைவுகளுக்கு மத்தியிலிருந்து கருகிய நிலையிலான சடலங்கள் மீட்கப்பட்டன. அமைச்சர் அஷ்ரபின் ஜனாஸாவை சப்ரகமுவ மாகாண சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க அடையாளம் காட்டினார். அமைச்சர் அஷ்ரப் ஹெலிக்கொப்டர் விபத்தில் சிக்கி மரணமானார் என்ற செய்தி கிழக்கு மாகாணத்தில் காட்டு தீ போல் பரவிய போது மக்கள் வாய்விட்டுக் கதறினார்கள். சோகம் தாளாமல் தலையில் அடித்துப் புலம்பினார்கள்.

அமைச்சரை வரவேற்பதற்காக மாபெரும் தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்த கிழக்கு மாகாண வீதியெங்கும் துயரவெள்ளம் கரை புரண்டது. வரலாறு காணாத சோகத்தில் கிழக்கு மாகாணம் மூழ்கிப் போனது. தனது சொந்த சகோதரனை இழந்த துயரத்தில் கிழக்கு மாகாண மக்கள் செயலிழந்து நின்றார்கள்.

மர்ஹூம் எம்,எச்.எம். அஷ்ரப் அவர்கள் 1948 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி சம்மாந்துறையில் முஹம்மது மீரா லெப்பை ஹூஸைன் மற்றும் மதீனா உம்மா தம்பதிகளுக்கு சிரேஷ்ட புதல்வராக கல்முனையில் பிரபலமான காரியப்பர் குடும்பத்தில் பிறந்தார். 1977 ஆம் ஆண்டு எம்.எச்.எம். அஷ்ரப், பேரியல் இஸ்மாயிலுடன் தனது இல்லற வாழ்வில் நுழைந்தார்.

சட்டக் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்திலேயே அஷ்ரப் இலங்கை அரசியலில் தீவிர ஆர்வம் கொண்டார். அஷ்ரப் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தார். தந்தை செல்வநாயகத்தை தனது அரசியல் குருவாக அஷ்ரப் வகுத்துக் கொண்டார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளில் தீவிர பங்கு கொண்ட எம்.எச்.எம். அஷ்ரப் முஸ்லிம் சமூகத்தைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினார்.

சிறுபான்மைச் சமூகங்க தனித்துவங்களை அடையாளப்படுத்தி தனது உரிமைகளுக்காக போராடாதவரை அந்த சமூகங்கள் கையேந்தி நிற்க வேண்டிய அவல நிலையை அவர் அறிந்தார். இந்த நிலையில்தான் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உதயமானது.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபைத் தலைவராகக் கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வடக்கு, கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்களை ஓரணியில் இணைப்பதற்கு பெரு முயற்சிகளை மேற்கொண்டது.

முஸ்லிம்களின் தனித்துவமான குரலாக அது ஒலிக்கத் தொடங்கியது. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முதன் முறையாக அரசியல் பிரவேசம் செய்தது. எதிர்பார்த்ததற்கு மேலாக வடக்கு, கிழக்கில் முஸ்லிம் மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிக்கு ஏகோபித்த ஆதரவை வழங்கினார்கள்.

1989 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முதன் முதலாக போட்டியிட்டது. அந்தத் தேர்தலில் நான்கு இடங்களைக் கைப்பற்றியது. எம்.எச்.எம். அஷ்ரப், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, ஏ. அபூபக்கர், என்.எம். புகார்தீன் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களானார்கள்.

1994 ஆம் ஆண்டில் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது. அது மட்டுமன்றி அஷ்ரப் – சந்திரிக்கா ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது. வடக்கு, கிழக்கில் மட்டும் தம் செயற்பாடுகளை மட்டுப்படுத்தி வைத்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ரீதியாக சிந்திக்கவும், செயற்படவும் தொடங்கியது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அந்தத் தேர்தலில் ஒன்பது இடங்களைக் கைப்பற்றியது. இந்தத் தேர்தலில் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களை தேசியத் தலைவராகவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை தேசியக் கட்சியாகவும்

தொடர்ச்சி ▼

# முஸ்லிம்களை ஒன்றிணைத்த ஆளுமை அஷ்ரப்

## இன்று அவரது 25 ஆவது ஆண்டு நினைவு தினம்

தொடர்ச்சி ▲

பரிணமிக்கச் செய்தது. 1994 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி அரசில் எம்.எச்.எம். அஷ்ரப் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அவர் காலத்தில் திட்டமிடப்பட்ட பணிகளில் ஒலுவில் துறைமுகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், காலித் துறைமுக அபிவிருத்தி, எலிசபத் இறங்குதுறை அபிவிருத்தி போன்றவை இன்றும் எம்மத்தியில் நிலைத்து நிற்க வல்லன.

புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை வரைவதில் அஷ்ரப் மிகத் தீவிரமாக உழைத்திருந்தார். ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானார். அதன் பெறுபேறாகத் தான் ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்புச் சட்டமூலத்தை சமர்ப்பித்து உரையாற்றும் பெரும் பொறுப்பு அவருக்குக் கிட்டியது. சுமார் 3 மணித்தியாலங்களாக அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் ஆற்றிய உரை இலங்கை அரசியல் வரலாற்றில் நினைவு கூரப்படும் சிறப்புக்குரியதாகும்.

அரசியல் என்பது அஷ்ரப் அவர்களின் வாழ்வில் ஒரு சிறு பகுதி மட்டுமே. அதற்கு அப்பால் அஷ்ரப்பின் பல்துறை சார்ந்த ஆளுமையே அவரை ஒரு மகா புருஷராக எம்முடன் நடமாட வைத்துள்ளது. அஷ்ரப் அவர்களின் பேச்சுத் திறனும் தர்க்கிக்கும் ஆற்றலும், விவாதத் திறனும் மெய்மறக்கச் செய்யும் வல்லமை கொண்டவை. மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் வாழ்க்கை ஓட்டத்தை அணுகி ஆராய்வோர் அவரிடம் அமானுஷ்யமான ஓர் ஆற்றல் பரிணமிப்பதை ஏற்றுக் கொள்வார்கள்.

அந்த வகையில் மர்/ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் ஒரு வாழ்க்கைத் தத்துவமாக நிற்கின்றார். அதனால் தான் அவரால் மரணத்தை நோக்கி சிந்திக்க முடிந்தது. மரணத்தோடும் அவரால் போராட முடிந்தது, அவரால் மரணத்தை நோக்கி அறைகூவல் விடுக்கவும், மானுடத்தை நோக்கி நேசக்கரம் நீட்டவும் முடிந்தது.

அன்னாருக்கு ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவனபதி கிடைக்கவும், அவருடைய கப்று சுவனபதியால் விசாலமாக்கப்படவும் வல்ல அல்லாஹ்விடம் நாம் பிரார்த்திப்போம்.

# முஸ்லிம் சமூகத்தினது அடையாளம் பெருந்தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்

-கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் -
(நாடாளுமன்ற உறுப்பினர்,
பிரதித் தலைவர் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்)



மாபெரும் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்களுடைய இழப்பு என்பது முஸ்லிம் சமூகத்தைஒ பொறுத்த வரையில் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் முஸ்லிம் சமூகத்திற்கு விட்டுச் சென்ற மிகப் பெரும் சொத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகும். அதன் மூலமாக இன்று இந்த நாட்டில் பல முஸ்லிம்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக, தலைவர்களாக உருவாகியிருக்கின்றனர். அத்தனை பேருக்குரிய தாயகமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸே இருக்கிறது.

அவர் முஸ்லிம் மக்களுக்காக பல்வேறு தியாகங்களை செய்தவர். எந்தச் சந்தர்ப்பத்திலும் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளையும், உணர்வுகளையும் விட்டுக் கொடுக்காதவர்.

நான் அவருடன் 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டுவரை நாடாளுமன்றத்தில் இருந்தேன். அவரோடு பல்வேறு கூட்டங்கள், நிகழ்வுகள், சர்வதேச கலந்துரையாடல்களுக்குச் சென்றிருக்கிறேன்.

குறிப்பாக முஸ்லிம்களுக்கு மிக மோசமான, பயங்கரமான காலகட்டம் தான் 1990 – 2000 வரையிலான காலப் பகுதி. முஸ்லிம்கள் படுகொலை, முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டமை, கிழக்கு மாகாணத்தில் பல முஸ்லிம் கிராமங்கள் அழிக்கப்பட்டமை, முஸ்லிம்களின் சொத்துக்கள் சுரண்டப்பட்டமை உட்பட பல சோதனையான காலம். அப்போது முஸ்லிம்களை பாதுகாப்பது, கிராமங்களை பாதுகாப்பது, டுவுவுநு யின் அட்டகாசத்திலிருந்து மக்களை பாதுகாப்பது போன்ற முக்கிய விடயங்களுக்கு அவருடைய தலைமையில் தான் கட்சி முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

அந்தக் காலப் பகுதியில் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் அர்ப்பணிப்பு என்றும் நினைவில் கொள்ள வேண்டியது. நாம் அவரோடு ஒன்றாக இருந்து இவ்விடயங்களைக் கையாண்டோம்.

அதுபோன்று, முஸ்லிம் இளைஞர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல அச்சுறுத்தல்களை எதிர்நோக்கிய சந்தர்ப்பத்தில், பல சவால்களை எதிர்நோக்கிப் போராடி, தென்கிழக்கு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

இவ்வாறு முஸ்லிம் சமூகத்தில் எதிர்நோக்கிய பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றிற்கு தீர்வை பெற்றுக் கொடுத்தவர் பெருந்தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள்.

முஸ்லிம் சமூகத்திற்கு அவர் ஆற்றிய பணிகள், அபிவிருத்திப் பணிகள் பல உள்ளன. டுவுவுநுயினரால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு புத்தளம் பிரதேசத்தில் காணிகளை வழங்கி குடியேற்றியமை போன்ற பல சிறப்புப் பணிகளை செய்தவர்.

எமது மறைந்த மாபெரும் தலைவர், முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர், முஸ்லிம் சமூகத்தின் மூத்த விடுதலைப் போராளி, விடுதலை உணர்வை எமக்கு ஊட்டிய எம் தலைவருடைய தூய பணிகளை அல்லாஹ் தஆலா ஏற்று, உயர்ந்த சுவர்க்கத்தை அவருக்கு வழங்குவானாக என்று பிரார்த்திக்கின்றோம்.

# இன்றைய ராசி பலன்கள் -16.09.2025




இன்று நீங்கள் உங்களின் அறிவுத்திறனை இழக்க நேரும். உங்கள் பேச்சில் பதட்டமும் வேதனையும் பிரதிபலிக்கும். பிரார்த்தனை நல்ல பலனைத்தரும்.

பணியில் மந்த நிலை காணப்படும். முறையான திட்டமிடல் இருந்தால் நீங்கள் சிறப்பாக செயலாற்ற முடியும்.

உங்கள் துணையுடனான உங்களின் அணுகுமுறையில் ஈகோ பிரச்சினை காணப்படும். நட்பான அணுகுமுறை மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.

தேவையில்லாத செலவுகளால் மனக் கவலைகள் ஏற்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் கூடுதலாக இருக்கும்.

மூட்டு வலி அல்லது தோள்களில் வலி போன்ற உபாதைகள் ஏற்படலாம். பதட்டத்திலிருந்து விடுபட தியானம் மேற்கொள்ளுங்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் மேம்படும்.




இன்றைய நாளில் மோசமான சூழ்நிலை காணப்படும். அவற்றை சமாளிப்பதற்கு போதுமான தைரியம் இழந்து காணப்படுவீர்கள். எதிர்மறை எண்ணங்கள் நிறைந்திருக்கும். அதை மாற்றி நேர்மறையாக்குங்கள்.

இன்று வேலையில் மும்மரமாக இருப்பீர்கள். இணக்கமான அணுகுமுறை இருந்தால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடித்து வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலின் காரணமாய் நல்லுறவை பராமரிக்க முடியாது. இது மகிழ்ச்சியை சீர் குலைக்கும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். குறைந்த அளவே நிதி காணப்படுவதால் உங்கள் பொறுப்புகளை பூர்த்தி செய்ய இயலாது.




இன்று வளர்ச்சிக்கு சாதகமான நாளாக இருக்க வாய்ப்பில்லை. ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். இன்று மனதை அமைதியாகவும் சம நிலையுடனும் வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

உங்கள் பணியில் முன்னேற்றமான பலன்களைக் காண்பீர்கள். இன்று உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை திணிப்பீர்கள். நல்லிணக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ள அத்தகைய உணர்ச்சி பூர்வமான போக்குகளை தவிர்ப்பது நல்லது.

பண இழப்புக் காணப்படுகின்றது. உங்கள் அலட்சியமான போக்கால் நீங்கள் பணம் இழக்க நேரலாம். பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.




இன்றைய நாள் நீங்கள் விரைந்து முடிவெடுப்பதற்கு சாதகமாக அமையும். உங்களின் உறுதியான மற்றும் தைரியமான மனநிலை மற்றும் அதனுடன் சேர்ந்த உங்கள் திறமை காரணமாக உங்கள் இலட்சியத்தில் நீங்கள் வெற்றி காண்பீர்கள்.

இன்று குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதில் தாமதம் இருக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். இது உங்கள் துணையுடனான நல்லிணக்கத்தை மேம்படுத்த உதவும்.

பணவரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் தேவைகளை சமாளிக்க போதுமான பணம் காணப்படும். உங்கள் தேவைகளுக்காக சிறு கடன்கள் வாங்குவீர்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மனநிலை உங்களை நல்ல ஆரோக்கியத்துடன் வைத்திருக்க உதவும்.




இன்று அழுத்தமான சூழ்நிலைகளும் வெற்றிக்கு குறைந்த வாய்ப்புகளும் காணப்படுகின்றன. தினசரி அலுவல்களை எச்சரிக்கையான அணுகுமுறையுடன் கையாளவும்.

உங்களிடம் காணப்படும் குறைந்த தன்னம்பிக்கை காரணமாக திறமையாக பணிகளை ஆற்றுவது கடினம். இதனால் பணிகளில் தொய்வு காணப்படும். புணியாற்றும் முறைகளை திட்டமிடுவது நல்லது.

புரிந்துணர்வில் காணப்படும் பிரச்சினைகள் காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படும்.உங்கள் துணையுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்று வீணாண செலவுகள் செய்வதற்கான சாத்தியம் உள்ளது. குடும்பத்திற்காக கூடுதல் செலவினங்களை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். தினசரி செயல்களை மேற்கொள்வதும் கூட இன்று கடினமாக இருக்கும். களிப்பான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் இன்று நற்பலன்களைக் காணலாம்.

பணிகளில் தவறுகள் நேரலாம். பணிகளில் தவறுகள் நேராமல் தடுக்க உங்கள் நிலைமையை உத்தேசித்து உங்கள் செயல்திறனை மேம்படுத்த வேண்டும்.

பாதுகாப்பின்மை என்ற உணர்வு உங்களை பாதிக்கும். அதனை உங்கள் துணையிடத்திலும் வெளிப்படுத்துவீர்கள். இது உறவில் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் சேரந்து இன்றைய நாளை கழிப்பதற்கு உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

செலவுகள் பெருகி காணப்படும்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு நீங்கள் கடன் வாங்குவீர்கள்.

சளித்தொல்லைகளால் பாதிப்புகள் ஏற்படலாம்.




இன்று யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் செயல்களில் உணர்ச்சி வசப்படக் கூடாது. அமைதியாக இருந்தால் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். வெளியிடங்களுக்குச் செல்வது ஆறுதலை அளிக்கும்.

குறித்த நேரத்துக்குள் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பீர்கள். உங்களின் சிறப்பான செயல்திறன் மூலம் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்களின் அகந்தையான போக்கை காண்பிப்பதால் உறவின் நல்லிணக்கம் சீர்குலையும். மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள அத்தகைய உணர்வுகளை தவிர்த்துவிடுங்கள்.

தேவையில்லாத செலவினங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதால் உங்கள் செலவு செய்யும் பழக்கத்தை கட்டுப்படுத்துவது அவசியம். நிதியின் ஸ்திரத்தன்மையை பராமரிக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.




உறுதியுடனும் தைரியத்துடனும் செயற்பட்டு இன்று செயல்களில் வெற்றி கண்டு மகிழ்வீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

உங்களின் பணியாற்றும் முறையில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் செய்த பணிக்காக நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடிகளாய் மகிழ்ச்சியையும் களிப்பையும் அனுபவிப்பீர்கள்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். உங்களுக்கு ஆழ்ந்த திருப்தி உண்டாகும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடுகளுமின்றி முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -16.09.2025




முக்கியமான விஷயங்களை நிறைவேற்றுவதற்கு உகந்த நாள். ஆன்மீகத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்.

உங்கள் பணிவளர்ச்சியில் தடைகள் காணப்படும். முறையான திட்டமிடல் மூலம் பணிகளைக் கையாண்டால் பணிச் சுமைகளைக் கையாளலாம்.

உங்கள் துணையுடனான நேர்மையான போக்கு அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். இந்த நேர்மை சரியான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வழிவகுக்கும்.

பணம் அதிகம் பெறுவதற்கான அதிர்ஷ்டம் உள்ளது. கணிசமான தொகையை சேர்ப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆன்மீக சக்திகளின் காரணமாக ஸ்திரமான ஆரோக்கியத்தை நீங்கள் பராமரிக்க முடியும்.




உங்கள் நலன்களை ஊக்குவிக்கும் விஷயங்களில் முடிவெடுப்பதற்கு இன்று உகந்த நாள். இன்று நீங்கள் நிறைவான திருப்தியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையுடன் நல்ல நட்பான உறவுமுறையை வளர்த்துக்கொள்ள உதவும்.

நிதி நிலைமை மிகவும் திருப்திகரமாகக் காணப்படும் . உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களின் சிறந்த மனநிலை காரணமாக சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று அறிவு பூர்வமான அணுகுமுறையுடன் விஷயங்களை கையாள வேண்டும். வெற்றி அடைவதற்கு நீங்கள் கடினமான முயற்சியுடன் போராட வேண்டும்.

உங்கள் செயல்திறன் மூலம் பணியில் நல்ல பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெறுவீர்கள்.

மோதல்கள் ஏற்படாமல் இருக்க உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் வார்த்தைகளில் மிகவும் கவனமாகப் பேச வேண்டும். எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளப் பழகுங்கள்.

இன்று முக்கியமான நிதி முடிவுகளை எடுப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. பெரிய முதலீடுகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் அதில் நல்ல வருமானம் கிடைக்காது.

பல்வலி அல்லது செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படலாம். ஆரோக்கியத்தில் சிறந்த கவனம் செலுத்துங்கள்.




இன்று முன்னேற்றமான பலன்கள் காணப்படும். உங்களுடைய உறுதியான முயற்சியினால் நீங்கள் மேற்கொண்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். மன ஆற்றலும் நேர்மறையான எண்ணங்களும் இருந்தால் வெற்றி கிடைக்கும்.

பணியில் தவறுகளைக் குறைக்கும்வண்ணம் உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். கவனச் சிதறல்கள் ஏற்படாவண்ணம் கவனித்துக் கெள்ளுங்கள்.

உங்கள் துணையின் விருப்பதுக்கேற்ப நடந்து கொள்வீர்கள். இது உங்கள் இருவருக்கிடையேயான உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

நிதிநிலைமை ஸ்திரத்தன்மையுடன் காணப்படும். கையில் ஓரளவு பணம் காணப்படும். அதை ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்துவீர்கள்.

எந்தவிதமான உபாதைகளும் காணப்படாது. தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் நடவடிக்கைகள் நிறைவு

## நீதி அமைச்சர் ஹர்ஷன தெரிவிப்பு

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் நடவடிக்கைகள் கிட்டத்தட்ட நிறைவடைந்துள்ளன. இது தொடர்பான சட்ட வரைவு இன்னும் சில நாட்களில் இறுதிப்படுத்தப்படும்."

– இவ்வாறு நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"பயங்கரவாத் தடைச் சட்டத்தை நீக்குவதென்பது அரசின் தேர்தல் வாக்குறுதியாகும். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் நாங்கள் முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் நடவடிக்கைகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. இந்தப் பணிகள் கிட்டத்தட்ட நிறைவடைந்து, தற்போது சட்ட வரைவை இறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.



இந்த விவகாரத்தைக் கையாள்வதற்காக அமைக்கப்பட்ட குழு தற்போது மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது."

– என்றார்.